தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 கும்பம் 1 (13 - 2 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 12 | பகுதி 14-15

தமிழின அழிப்பு முயற்சி தொடர் கதை ஆகிறது!

கேரளத்தில் ஓரிலக்கம் தமிழர்கள் ஏதிலிகளாக்கப்படுகின்றனர்!

குரங்குகளிடமும் மரங்களிடமும் காட்டுகின்ற ஈவு இரக்கம்கூடத் தமிழனுக்கு இல்லையா ?

★ மூணாறு பகுதியில் தமிழர்கள் விரட்டப்படுவார்களா?

கேரள அரசு மூணாற்றில் 250 அயிர அலகு (மெகா வாட்) மின்சாரம் உருவாக்கம் செய்ய அணைகட்டத் திட்டமிட்டுள்ளது. அந்த அணை கட்டி முடிக்கப்பட்டால் மூணாறு உட்பட பதின் மூன்று மலைத் தோட்டங்கள் தண்ணீரில் மூழ்கும். ஓரிலக்கம் தமிழர்கள் ஏதிலிகளாக (அகதிகள்) ஆக்கப்படுவார்கள்.

மூணாறு நகரையும் அங்கு பெரும்பான்மையினராக வாழும் தமிழர்களின் உள்ளங்களையும், கொந்தளிக்கும் எரிமலையாக ஆக்கக் காரணம் என்ன ?

மூணாறு நகர் தமிழர்கள் இன்று நேற்றுக் குடியேறிய பகுதி அன்று. மூன்று தலைமுறைகளுக்கு மேலாக அரத்தத்தை வியர்வையாகச் சிந்திக் காடுகளைத் திருத்தித் தேயிலைத் தோட்டங்களாக உருவாக்கிய பகுதி ஆகும். அக்காலத்தில் அஃதாவது 100 ஆண்டுகளுக்கு முன் 1877 - இல் யானையும், புலியும், சிறுத்தையும், செந்நாய்களும் திரிந்த இந்த மேற்கு மலைக்காடுகளுக்கு என்றி கிரிபிள்டேர்னல் என்ற வெள்ளைக்கார அதிகாரி சென்றிருந்தார். எழில்மிக்க இயற்கைக் காட்சிகளைக் கண்ட அவர், அப்பகுதியில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கினால் சிறப்பாக இருக்கும் என்று கருதித் திட்டமிட்டார்.

பழங்குடி மக்களின் தலைவர்களாக இருந்த திரு. கண்ணன், திரு தேவன் ஆகியோர் தாம் வெள்ளைக்கார அதிகாரிக்கு வழிகாட்டிகளாக இருந்தனர். இத்திட்டத்தை அடுத்து, திரு. சே. டி. மன்ரோ என்ற வெள்ளையர் 277 சதுரக் கல் நிலத்தை விலை பேசி அரசிடமிருந்து பெற்றார்.

தமிழர்கள் குடியேற்றம்

அந்தப்பகுதியில் காடுகளைத் திருத்தித் தோட்டங்களை அமைக்கக் கடும் உழைப்பாளிகள் தேவை என்று கருதிய வெள்ளை அதிகாரி முகவை, நெல்லை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து பழங்குடி மக்களை அழைத்து வந்தார். கரடு முரடான காடு தமிழர்கள் பச்சை அரத்தம் சிந்திய கடும் உழைப்பால் தேயிலைத் தோட்டமாகியது. முதலில் 50 குறுக்கத்தில் பயிரிடப் பெற்றதேயிலை இன்று 14,125 குறுக்கம் (ஏக்கர்) அளவிற்கு விரிந்து பரந்து வெளிநாட்டு வருவாயை ஈட்டித் தரும் அழகிய மூணாறு பகுதியாக விளங்குகிறது

8850 அடி உயரமுள்ள ஆனைமுடி மலையின் கீழே பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இந்த மூணாறு தான், இந்தியாவிலேயே பெரிய ஊராட்சியாகும். மூன்று ஆறுகள் ஒன்றாக இணைந்ததன் காரணமாக மூணாறு என்று பெயர் பெற்று எழில் கொழிக்கும் நகரமாகக் காட்சி அளிக்கிறது.

ஆனால் இந்தப் பெருமைக்கெல்லாம உரியவர்களாகத் தமிழர்கள் இருக்கப் போவது இன்னும் எத்தனை மாதங்கள் ? மூணாறு நகர் ஓரிலக்கம் தமிழர்களை ஏதிலிகளாக்கி விட்டுத் தண்ணீரில் மூழ்கடிக்கப்படுவதை முழுமூச்சாக எதிர்க்கிறார்கள் அங்குள்ள மக்கள். 'உயிரையும் கொடுத்து மூணாற்றைக் காப்போம் அல்லது தண்ணீரில் மூழ்கி அனைவரும் சாவோம்'' என்ற ஒரே முழக்கம் அவர்களின் உள்ளங்களில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

கேரள சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வரதன் அவர்கள் தலைமையில் ''மூணாறு பாதுகாப்புக் குழு'' அமைத்து உரிமைகளைக் காக்க ஒற்றுமையுடன் போராடி வருகிறார்கள் தமிழர்கள்.

ச. ம. உறுப்பினர் திரு. வரதன் அவர்கள் கூறுவது.

மூணாற்றைப் பொருத்தவரையில் 90 விழுக்காட்டினர் தமிழர்கள். பத்து விழுக்காட்டினர் மலையாளிகள். மொத்த மக்கள் தொகையில் 70 விழுக்காட்டினர் பழங்குடித் தமிழ் மக்கள். (அரிசன்)

120 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் நடந்து வந்தே அந்தப் பகுதியை வளப்படுத்தினார்கள். தேயிலை ஆயிரம் காலத்துப் பயிர். இங்குள்ள பயிர்களுக்கு நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வெள்ளைக்காரன் தனக்கு இந்தப் பகுதியைச் சுற்றிக் காட்டிய திரு. கண்ணன்—தேவன் பெயரிலேயே தேயிலை நிறுவனத்தைத் தொடங்கினான். அது பின்னர் டாடா பின்லே கைவயம் ஆகி, இன்று முழுவதுமாக டாடா வயம் ஆகியுள்ளது.

நடுவண் - மாநில அரசுகளுக்கு கொழுத்த வருமானத்தை அள்ளித் தரும் தேயிலையை உருவாக்கும் தொழிலாளர்கள் இன்றும் நாட்கூலிகளாகத்தான் உள்ளனர். உழைப்பால் உயர்ந்த இந்த மூணாறு நகரை 250 அயிர அலகு மின் உருவாக்கத்திற்காக நீரில் மூழ்கடிப்போம் என்பது வேடிக்கையாக உள்ளது. இந்த அணை கட்டுவதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு மூன்று காரணங்களுண்டு.

1: பாலக்காடு மாவட்டத்தில் 'அமைதிப்பள்ளத்தாக்கு' (S lent Valley) என்ற இடத்தில் பெரிய அணை கட்ட வாய்ப்பு உள்ளது. அங்கு உரூபா 10 கோடி செலவில் அணைகட்ட ஆய்வு நடத்தினர். அங்கு, வால் இல்லாத குரங்குகள் தோராயமாக 50 மட்டும் உள்ளன. மற்றும் வியப்பு மிக்க பறவைகளும் உயிரினங்களும் உள்ளன. எனவே அணை கட்டினால் அவை அழிந்துவிடும் என்று எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாகத் திட்டம் கைவிடப்பட்டது.

2. அடுத்து, புயான்குட்டி அணைத் திட்டம் பல கோடி

(8-ஆம் பக்கம் பார்க்க)

குன்றக்குடி அடிகளார் கருத்துக்குத் திருத்தம்!

'தமிழ் நிலம்' 9—1—83 இதழில் முகப்புப் பக்கத்தில் 'அறிவின் முனைவன்' கேள்விக்கு, அடிகளார் தந்த விடையில், "மலேசியாவில் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக இருக்கிறது" என்ற வரியே பிழையானது. மலேசிய நாட்டில 'தனியாகத்' தமிழ்ப் பள்ளிகள் இருக்கின்றன. இவற்றில 6-ஆம் வகுப்பு வரை தமிழ்ப் பயிற்று மொழியாக உள்ளது. 6-ஆம் படிவம வரை தமிழ் தரு பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கிறார்கள் தேசிய மொழியைச் சிறப்புறக் கற்றும், சிறந்த தேர்ச்சி பெற்றும் சிறப்பு வாய்ப்புரிமை இல்லாததால மலாய் மக்களுடன் தமிழர்களால் போட்டி போட முடியவில்லை. ஒற்றுமையில்லாத சில தமிழர்கள் தத்தம பிள்ளைகளை மலாய்த் தொடக்கப் பள்ளியில் படிக்க வைப்பதன் மூலம் தமிழைக் கற்காமலும், பேணாமலும் இருப்பது மலே நாட்டிலும் உண்டு.

மலேசியாவுக்கு அவர் பல தடவை போய் வந்தும் சரிவரச் சொல்லவில்லை.

"இலங்கையில் முப்பிரிவினர் இருப்பதாகச் சொல்லியிருப்பதும் தப்பு. வவுனியா என்ற வன்னியப்பைதிரத் தமிழர்களும் யாழ்ப்பாணத் தமிழர்களும் உளப்பான்மையில் ஒன்றுபட்டு இல்லை; இது நிற்க, தமிழீழ இசுலாமியத் தமிழர் மேறு ஆறு இலக்கம பேர் அங்கு உள்ளனர். ஆகவே இவகையாகத் தமிழர் பிரிவு பட்டுப பிளவுடன் ஒற்றுமையிலலாததால இலங்கைத் தமிழர் முன்னேறவிலலை எனற அவர் கருததுப பிழையானது. இந்தியாவில — தமிழ் நாட்டில் மூன்று பிரிவில் முப்பது வேறுபாடும் முந்நூறு சாதியமும் உள்ள குன்றக்குடி வட்டாரமும், தமழகமும ஒற்றுமையாக உள்ளதா எனக் கேட்டால் இல்லை என்றே மறுமொழி கிடைக்கும்.

பத்தாம் நூற்றாண்டு முதல் - இராசராசன் என்ற மும்முடிச் சோழன் காலமுதல் வவுனியா, திருக்கோணமலை, முல்லைத் தீவு, மன்னார், மட்டக் களப்பு ஆகிய இலங்கையின் அரைப் பகுதியாக எழுந்த வன்னியப் பகுதியில சிற்றரசர்களால் 1832 வரை எவருக்கும் அடிமையாகாமல் தமிழரே வாழ்ந்து சிறந்திருக்கின்றனர்.

1968-இல் எற்பட்ட மொழிக் காப்புப் போராட்ட முதல் 1977-இல் நிகழ்ந்த தமிழர் படுகொலைக் காலம் வரையிலும், அதற்குப் பிறகும் தமிழர் குடியிருப்பு வட பகுதிகளிலும், கிழக்குப் பகுதிகளிலும் பரவலாக ஏற்பட்டன. தமிழர்கள் தனித்தும், குழு குழுவாகவும் எத்தனையோ குடியிருப்புகளை அமைத்தார்கள். உயிரும், உடைமையும், நிலமும் இழந்தும் பல்லாயிரக்கணக்கில் கண்டி, துவரலியா போன்ற தேயிலைக் காடுகளை விட்டு விட்டு வடக்கில போயும் 'குடியிருப்பு அமைத்தும்' சிங்களர்களால் இதற்குக் கெடுபிடியும், அழிப்பும், சூழ்ச்சியும் செய்யப்பட்டன. தமிழ் நாட்டுத் தமிழடிமைகளை (குன்றக்குடி அடிகளார் உட்பட) ஈழத் தமிழர்கள் ஆயிரம் ஆண்டுகளாகத் தனியுரிமை நாட்டுப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர், சிறைப் போராட்டப் பலியாகியுள்ளனர்.

பல தமிழகத் தலைவர்களுக்கும், மடத்தலைவர்களுக்கும், இலங்கையை பற்றிய தெளிவும் அறிவும் கிடையாது. சாதி—மதம்—அரசியல் தருக்கம் பேசிப் பேசி வரும் இங்குள்ளவர்கள் தவறாமல் **முகுந்தன்** எழுதி வரும் **"தமிழீழ விடுதலை வரலாறு"** தொடரைக் கட்டாயம் படித்துத் தெளிவடைய வேண்டும், குன்றக்குடி அடிகளாரும், பெரிய பெரிய எழுத்தாளர்களும் அதனைப் படிக்கட்டும். தெளிவடையட்டும்.

— மலைக்கிழார், மலேசியா.

அயலகங்களில் வாழும் தமிழர்கள்

இலங்கை	(1974)	30,00,000
சிங்கப்பூர்	(1975)	87,150
மலாயா	(1975)	634,681
பர்மா	(1966)	200,000
மொரிசீசு	(1972)	70,000
பிசி தீவு	(1965)	25,000
இந்தோனேசியா	(1981)	35.000
தென் வியட்நாம்	(1981)	1,500
மேற்கு இந்தியத் தீவுகள்:		
குவாடலோப்	(1982)	21,084
மார்ட்டினிக்	(1982)	13,111
தகித்தி	(1920)	20
தென் ஆப்பிரிக்கா		4.00,000
ரீ யூனியன் தீவு		1,50,000

பிற நாட்டு விளத்தங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் திரட்டப் பெற்று வருகின்றன.

செய்தி: "தென்னவன்"

செய்க ஒரு சிறு தொண்டு!

தஞ்சை. பா. இறையரசன் க. மு.

தமிழ்நாட்டில் வானொலியில விடிந்ததும் வழிபாட்டுப் பாடல்கள என்ற பெயரிலும, பன்னர் இசை என்ற பெயரிலும வடமொழி, தெலுங்குப் பாடல்களை ஒலி பரப்பி வருகின்றனர் சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்தும் வணிக (வர்த்தக...) ஒலிபரப்பு என்ற பெயரில் இந்திப் பாடல்களைப் பல மணி நேரம் ஒலிபரப்புகின்றனர். கேட்க ஆளில்லை! கேட்கும் சிலரும் எங்களிடம் நீ திருடிப நூறில ஐம்பது கொடுத்தால் போதும என்று வாங்கி வந்து இருபத்தைந்தில் வெற்றி விழாக் கொண்டாடி விடுகின்றனர். இல்லா விட்டால 'ஆகாச வாணி' என்பது போய் 'ஆல் இண்டியா ரேடியோ' என்றிருந்தால் போதும் என்று இருப்போமா? 'தூர் தர்சன்' (தொலைக்காட்சி) என்பதற்கு எந்த எதிர்ப்பும இல்லையே! தூங்குகிற நேரத்தில மறுபடியுப 'ஆகாசவாணி'யைத் திணிக்கலாம என்றுதான் காத்திருக்கிறார்கள்.

'செய்திகள் வாசிப்பது இன்னார்' என்று கூறிச் செய்தியைக் கூறத் தொடங்குகிறார்கள். வாசிப்பது என்பதை ஈற்று விகுதி 'து' என்பது அஃறிணை முடிபுக்குரியது வாசிப்பது என அறிவிப்பாளர் தம்மைத் தாமே அஃறிணையாகக் கூறிக்கொள் கிறார் என்று சிலர் கூறலாம. ஆனால வானொலியின் வலிவால இப்பிழையை மற்றவரிடமும் ஏற்படுத்தும் அல்லவா? 'செய்திகள் வாசிப்பவர் இன்னார்' என்பதே சரியானது என நான் பலமுறை எழுதியும், பல தமிழறிஞர்கள் கூறியும் தில்லி வானொலி நிலைய செய்திப் பிரிவினர் ஏற்க மறுத்து வருகின்றனர்.

பெயர்களுக்கு முன்னால் வரும் எழுத்துக்களை ஆங்கிலத்தில் கூறியும், ஆங்கிலப் பெயர்களை வடமொழியில பெயர்த்துக் கூறியும், தமிழில் அமைந்த நிறுவனப் பெயர்களைப பாதித் தமிழ் பாதி ஆங்கிலமாகக் கூறியும் எனப் பல சிறு கேடுகளைச் செய்து வருகின்றனர்.

"சனநாயக நாட்டில் மக்களின் விருப்பம் அறிந்து மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் நோக்கத்தை மறந்து வானொலி நிலையம் சென்னையிலும் திருச்சியிலும் ஓயாமல தமிழல்லாத பாட்டுகளை நிரப்பி வருகிறது.' என்று முனைவர். மு. வ. அன்று சொன்ன குறை, இன்றும் நீங்கவில்லை. தொலைபேசி முகவரிப் பட்டியல் தாய்மொழியில் வேண்டுமெனறால், தொலை பேசி உடமையாளரில் முப்பது விழுக்காட்டுப் பேர் கேட்க வேண்டுமாம். யாரும் கேட்காததால் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகிறது.

தமிழ் உணர்விருந்தும் உரிமை கேட்கும் உணர்வு சிறிதும் ஏற்படாததால் பயன் விளையாமல் போகிறது. உயிர் கொடுக்கவோ போராடவோ முன்வராவிட்டாலும், உண்மையைப் பேசி எழுதி அமைதியான அன்பான வழியில் பெறுவதற்காவது முன்வர வேண்டும். தமழன்னைக்குத் தொண்டு செய்யும முகமாகக் கீழ்க் காணும் மடலை 15 காசு அஞ்சலட்டையிலேயே எழுதி வானொலிக்கு விடுக்க வேண்டுகிறேன். நண்பர்கள், மன்றங்கள், இதழ்கள், அரசியல் இயக்கங்கள் வழியும் இதனை நிறைவேற்ற முயல்க.

ஐயா, வணக்கம். கீழ்க்காணும் குறைகளை நீக்கி நிறை செய்ய வேண்டுகிறோம்.

1. 'செய்திகள் வாசிப்பது இன்னார்' என்பது தமிழ் இலக்கணப்படி தவறு.
   'செய்திகள் வாசிப்பவர் இன்னார்' என்று கூறப் பட வேண்டும்.
2. 'ஆல் இண்டியா ரேடியோ' என்று ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. 'இந்திய வானொலி' என்று தமிழில் கூறபபட வேண்டும்.
3. தமிழ்நாட்டில் வணிக ஒலிபரப்பில் இந்தி அதிக நேரமும் தமிழ் குறைந்த நேரமும் ஒலிபரப் பாகிறது. தமிழ் மட்டுமே ஒலிபரப்ப வேண்டும்.

இங்ஙனம்,

....

பெறுநர்
உயர்வமை இயக்குனர் அவர்கள்,
இந்திய வானொலியின் சென்னை நிலையம்,
சென்னை - 600 004

இயன்றோர் ஆங்கிலத்தில் கீழ்க்காணும் முகவரிக்கும் எழுதுக.

The Secretary, Ministry of I & B,
Sastry Bhavan, NEWDELHI—110 001.

"வாசிப்பது" சரியே

12—12—82 தமிழ் நில இதழில், வானொலியைத் 'திருந்தச் சொல்லும் தோழர் திரு. பா. இறையரசனாரின் குறிப்பினைக் கண்ணுற்றேன்.

"து" என்பது அஃறிணைக் குரியது எனகிறார். அது அப்படியன்று. "வாசிப்பது" என்பது 'து' கர இறுதித் தொழிற்பெயராகும். வாசிப்பதுஎன்பது வாசித்தல் என்ற பொருளில வருவது. "அங்கு வருவது யார் — நீ அவ்வாறு செய்வது முறையாகா — மேடையில பேசுவது யார் — சிரிப்பது யார் — படிப்பது நான் தான்—வாசிப்பது இவனார்" என்றபடி எண்ணிப் பார்க்க. எனவே, வாசிப்பவர் வாசிப்பது இரண்டுமே தவறில்லை.

- இமய நெடுஞ்சேரலாதன்
புதுக்கோட்டை.

o

அம்மா அப்பாவா? 'மம்மி டாடியா'?

என்றோ எகிப்தில் இறந்த பிணத்தை 'மம்மி' என்பார்களாம! இன்று தாயை அம்மா வென்று அழைக்கா விட்டாலும அம்மி என்றாவது அழைக்கலாமே! 'மம்மி' என்கின்றன குழவிகள்; தந்தையை 'டாடி' என்றால் குடிகாரன் ஆகாதோ? ஆங்கில போதை தலைக்கேறியதால், தந்தை 'டாடி' ஆனாரோ? இவரை 'தாடி' என்றால் கூட — அதில் தமிழாவது இருக்குமே ஆறறிவில்லாத ஆவின் கன்றும அம்மா என்று அழைக்கையிலே, மாந்தன் மட்டும் 'மம்மி'யானதேன்? தமிழனின் அறிவு 'டாடி'யாய்ப் போனதேன்?

—'சக்திக்கனல்'

'தமிழ்ப் பாங்கறிந்த தலைவனையே கூடுவேன்!'

காதலிதான் மடிந்தாலும்
கதவடைத்தே மூடினாலும்
சாதல்இலாத் தாய்தமிழை முழக்குவேன்!—தமிழைச்
சாய்க்கவரும் தடைகளையே விலக்குவேன்!

வேலையினை நீக்கினாலும்
வெந்துயர்கள் தேக்கினாலும்
காலமலர் தேன் தமிழைப் பரப்புவேன்—தமிழைக்
காதலிப்போர் நெஞ்சமெல்லாம் நிரப்புவேன்!

கொல்வறுமை கூட்டினாலும்
குடிபெயர்த்தே ஓட்டினாலும்
தேன்தமிழைப் புரப்பவரை வாழ்த்துவேன்—தமிழின்
திறங்கண்டும் பழிப்பவரைத் தாழ்த்துவேன்!

பார்வையினை பறித்தாலும்
படுதுயரே குவித்தாலும்
பார்மயக்கும் கனித்தமிழை நாடுவேன்—தமிழின்
பாங்கறிந்த தலைவனையே கூடுவேன்.

—பாவலர். கன்னல், க. மு., கல். இ

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 13-2-83 இதழ் எண்: 12 | பகுதி 14-15

முதலாளியங்களும் தமிழிய அறமும்!

முதல் வைத்திருப்பவன் முதலாளி. முதல் என்பது பொருள்முதலை மட்டுமே பொதுவாகக் குறித்தாலும், பொருளுக்கு மூல காரணமாகிய அனைத்து முதல்களுமே முதல் என்னும் சொல்லில் அடங்கும். அறிவு, கலை, கல்வி, தொழில் முதலிய அனைத்துமே முதல்தாம். அவற்றை முதலாகக் கொண்டும், ஒருவர் பொருளை ஈட்ட முடியும். அதை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளவும் முடியும். இன்னுஞ் சொன்னால் ஒருவர் இக்காலத்து அரசியல், அதிகாரம், பதவி, வாய்ச்சொல் திறன், கருவி முதலிய எதனையும் முதலாக வைத்தும் பெரும் பொருளை ஈட்டவும் பெருக்கவும் பெரும் முதலாளியாகவும் இயலும். மேலும், பொருள் என்னும் சொல், பணத்தை மட்டுமே குறிக்காமல். இவ்வுலகில் பருப்பொருள் (Matter) ஆக உள்ள அனைத்தையும் குறிக்கின்ற தமிழ்ச் சொல்லின் நுட்பத்தை அறிந்து கொள்ளுதல் வேண்டும். பணம் மட்டுமே பொருளன்று. மண்ணும், மணியும், பொன்னும், புழுதியும், உடலும், அழகும், நீரும், காற்றும் பொருள்களே! இவையும் முதல் (Capital) போல் பணத்தை ஈட்ட உதவுகின்றன.

மார்க்சிய மெய்ப்பாட்டில் உழைப்பும், பொருளும் ஒரு சேரவே மதிக்கப் பெறுகின்றன. நம் நாட்டைப் பெறுத்த மட்டில் முதலாளிகள் பல வகையினர். பிறப்பிலேயே முதலாளியக் கோட்பாடு உண்டு. எல்லாருக்கும் மேல்சாதிக்காரர்கள் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர்கள், இனத்தை முதலாக வைத்து நலம் பெறும் இன முதலாளிகளே! அறிவை வைத்துப் பிறரை ஆண்டு அடக்கிப் பணத்தை ஈட்டுபவன்கூட அறிவு முதலாளியே! (Intellectual Capitalist). இவ்வாறு கலை முதலாளிகள், கல்வி முதலாளிகள், தொழில் முதலாளிகள், பதவி முதலாளிகள், அதிகார முதலாளிகள் முதலிய பலதிற முதலாளிகள் எங்குமே அத்தகுதியற்ற அடிநிலை மக்களை சுரண்டியே வாழுகின்றனர். இன்னும், மத முதலாளிகளும், மந்திர தந்திர முதலாளிகளும் நம் நாட்டில் நிறையபேர் உண்டு.

பொதுவுடைமைக் கொள்கை உடையவர்கள் பொருள் அஃதாவது பணம், நிலம் வைத்திருப்பவர்களையே பெரும்பாலும் முதலாளியக் கோட்பாட்டில் அடக்கிப் பேசுவது, இத்தகைய முதலாளிகளை வெளிப்படையாக ஏழை மக்களைச் சுரண்டி வாழ்வதனாலேயே எனலாம். அரசியல் நிலையில் நேர்முக வரி, (Direct Tax), மறைமுக வரி (Indirect Tax) இருப்பன போல், முதலாளியத்திலும் வெளிப்படையான முதலாளியமும், மறைமுக முதலாளியமும் உண்டு.

திரைப்பட நடிகர் ஒருவர் ஒரு மணிநேரத்தில் தம் உடலை மென்மையாக அசைய வைத்துத் திரட்டும் பணத்தை அல்லது சுரண்டும் முதலை, விறகு வெட்டும் தொழிலாளி ஓராண்டுக்குத் தன் உடலின் அனைத்து நரம்புகளும் நெரிபடுமாறு உழைத்தாலும் ஈட்டிவிட முடியாது. அதே போல், இங்கு ஒரு மதத்தின் தலைவன் அல்லது மத நிறுவனத்தின் தலைவன், அமர்ந்த இடத்திலேயே ஒரு நாளைக்கு ஈட்டும் பொருளை, பொது நிலைத் தொழிலாளி ஒருவன் ஒரு மாதத்திற்கும் மேலாக உழைத்தாலும் பெற முடியாமற் போகும். எனவே, நிலவுடைமைக்காரன், பொருளுடைமைக் காரன் என இவர்கள் மட்டும் ஏழைகளைச் சுரண்டவில்லை அறிவுள்ளவன், கலைத்திறன் உள்ளவன், மதத்தலைவன், அரசியல். தலைவன், பதவி அதிகாரத் தலைவன் முதலிய அத்தனைப் பேர்களும் ஏழை மக்களைச் சுரண்டியே வள வாழ்க்கை வாழுகின்றனர். இந்த நிலைகள் உருசியா போலும் பொதுவுடைமை நாடுகளில் பெரும்பாலும் இல்லையென்றாலும், அங்கும் ஓரளவு அறிவு, அதிகாரச் சுரண்டல்கள் இல்லையென்று சொல்ல முடியாது.

இந்த அனைத்து வகைச் சுரண்டல்களுமே ஒழிக்கப்பட வேண்டியவைதாம். மனம், மூளை, உடல் ஆகிய மூன்று வகைச் சுரண்டல்களுமே ஒழிக்கப் பெறுதல் வேண்டும். ஏனெனில், இம்மூன்று இயற்கைக் கூறுகளில் ஏதாவது ஒரு கூறில் ஆளுமைத் திறம் உடைய எவனும் முதலாளியே! உடலை வைத்துப் பொருளீட்டும் முயற்சி தாழ்வாகவும், மனத்தை வைத்துப் பிழைக்கும் (கலை, கற்பனை, மதம் முதலிய) முயற்சிகள், அதனினும் உயர்வாகவும், அறிவை (மூளையை) வைத்துப் பிழைக்கும் முயற்சிகள் இவ்விரண்டினும் மேம்பட்டதாகவும் நினைக்கப் பெறுவது தவிர்க்கப் பெறும் நிலையே உண்மையான பொதுவுடைமை உணர்வாகும்.

மாந்தனாகப் பிறந்த எவனும் எதனாலும் உயர்ந்தவனாகவோ, தாழ்ந்தவனாகவோ கருதப்படக்கூடாது. அப்படி ஏதாவது ஒரு வகையில் கருதுவதை மெய்ம்மைப்படுத்தினாலும், அஃதாவது நயன்மைப்படுத்தினாலும் பொதுவுடைமைக் கோட்பாடு அடிப்பட்டுப் போய்விடும். அறிஞனும் உழைப்பாளியும் இவ்வுலக ஆக்கங்களைச் சமநிலையில் பகிர்ந்து கொண்டு வாழ வாய்ப்பளித்தல் வேண்டும். இல்லெனில் அவ்வேறுபாட்டு நிலைகள் படிப்படியாக இறங்கிவந்து, கறுப்பன், சிவப்பன், மேல்சாதி, கீழ் சாதி, மேறகத்தியவன். வடக்கத்தியவன் என்னும் வேறுபாடுகளையெல்லாம உருவாக்கி விடும். இந்த உண்மைகளைத்தான்,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' — என்னும் திருக்குறளும்,

பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' — என்னும் புறநானூற்று வரிகளும் தமிழிய அறமாக நமக்குக் காலங்காலமாகக் கூறிவருகின்றன என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்திரா பேராயத்தின் இரண்டகச் செயல்!

பேராயக் கட்சி பெருமை பெற்றதெல்லாம் பெருந்தலைவர் காமராசர் அவர்களாலே தான். தமிழகத்தில் பேராயக் கட்சியைக் குழி தோண்டிப் புதைத்த பெருமைக்குரிய பெரியவர் பக்தவச்சலம் என்னும் தில்லி அடிமையாவார்.

இன்று தமிழகச் சட்டமன்றில் இந்திக்கு ஆதரவாக இப்போது இருக்கும இந்திரா பேராயத்தார் பேசுவது மிகவும் நன்றி கொன்ற செயல் ஆகும். அவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்வது நல்லது. அவர்களின் மூதாதையரான பக்தவச்சலம், இந்திப் படிப்புக்கு ஆதரவாக துமுக்கியால் சுட்டும் 150 மேற்பட்ட மாணவர் பொது மக்களைக் கொன்றும எப்படியாவது இந்தியைத் தமிழகத்தில் ஊன்றிவிடப் பார்த்தார். அதோடு சரி, அவரின் அரசியல் வாழ்க்கை.

ஆனால், இப்போது இந்திரா பேராயத்தார், இந்திக்கு எதிர்ப்பான தி.மு.க வின் ஒப்போலைகளைப் பெற்று வெற்றியடைந்து இன்று சட்டமன்றத்தில் புகுந்துள்ளனர். அவர்கள் இந்தியை ஏற்பதாய் இருந்தால், தற்போது பெற்றுள்ள சட்டமன்றப் பதவிகளை விட்டுவிட்டுத் திரும்பவும் அதே தொகுதியில் இந்திக்கு ஆதரவாகப் பேசி வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும் இல்லையேல் வாயை இறுக்கி மூடிக் கொண்டு இருக்க வேண்டும். மீறினால் அவர்களுக்கு அடுத்த தேர்தலில், அவர்களைத் தேடினாலும் அகப்பட மாட்டாத நிலை ஏற்பட்டு விடும் என்பதை அறிவார்களாக.

இனி இன்று சட்டமன்றத்தில் இந்திக்கு ஆதரவாகக் குரல் எழும்புவதற்குக் காரணம் கலைஞரே. அவர் செய்த தமிழ் இனக்காப்பு முயற்சிகளை அவரே குழிதோண்டிப் புதைத்து விட்டார். இனியாவது உண்மையான முறையில தமிழ் இன உரிமைக்குத் தமிழக அரசைப் பயன்படுத்தி உரிமைகளைப் பெற வேண்டும். இந்திக்கு விரைவில் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அவ்வாறில்லையெனில் இனிக கலைஞர் வாழும்நாள் எல்லாம் வீழ்நாளே என்றும், இனியும் தமிழ் நாட்டரசை வடவர்க்குக் காட்டிக் கொடுப்பது அவர்க்கு எஞ்சியிருக்கும் புகழை அழித்து விடும். தன் மானத்தைக் காட்டிலும் இன மானமே பெரிது என்பதை அறியாதவரா கலைஞர்?

தற்போதைய சூழ்நிலையில் இரு திரவிடக் கட்சிகளும் இந்தியெதிர்ப்பில் மட்டுமாவது ஒன்றிணைந்து தமிழகத்தில் எங்கும் இந்தி இல்லை என்று ஆக்கவேண்டும். இல்லையெனில் வருங்காலத் தமிழகம் அவர்களை மன்னிக்காது என்பதை உணர்வார்களாக.

தென்மொழி.
நா. இளமாறன்

○

'கலைச்சொல்' இதழ் தரும் விடை

வினா: தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தண்பெயலாய்த் திண்ணிய அரணாய் இன்று விளங்குபவர் யார்?
—இளங்கண்ணன், திருச்சி.

விடை: தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தண் பெயலாய் இருப்போர் பலராயினும், திண்ணிய அரணாய் இருப்பவர் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார்'.
—(மலர் - 1; இதழ் - 4)

செய்தி. க. அருணாசலம், அமரர் பூண்டி.

தமிழ் நிலம் நன்கொடைப் பட்டியல்

16-12-82 முதல் 11-2-83 முடிய

1.	நாரண திருவிட செல்வன்	மலேசியா	100—00
2.	கா. இள முருகன்	பு.புளியம் பட்டி	101—00
3.	இல. வேலரங்கன்	தாராபுரம்	5—00
4.	ச. கயல்விழி	திருச்சி-1.	1—00
5.	ஓர் அமைப்பின் நன்கொடை.	குந்தகுந்தர் நகர்	25—00
6.	நா. இளமாறன்	பவானி	25—00
7.	அ. ப. கி. சீத்தாராமன்	உடுமலைப்பேட்டை	5—00
8.	சி. மகாலிங்கம்	காங்கேயம்	5—00
9.	மு. கருப்பசாமி	"	5—00
10.	ப. சகநாதன்	"	10—00
11.	பி. சிவக்கொழுந்து	"	5—00
12.	என். சக்திவடிவேல்	"	10—00
13.	இரா. சின்னசாமி	"	10—00
14.	கு. மீனாட்சிசுந்தரம்	திருப்பூர்	10—00
15.	மு. மௌனகுருசாமி	காங்கேயம்	10—00
16.	ப. முத்துக்குமார்	"	10—00
17.	சு. தங்கராசு	"	10—00
18.	என். சென்னியப்பன்	"	5—00
19.	இலுப்பைத் தோப்பு இளைஞர் மன்றம்	சென்னை-28.	5—00
20.	கி. இராமன், மலேசியா மக்கள் அரசு செயல் கட்சி உறுப்பினர்	மலேசியா	100—00
21.	இரா. உமாபதி	கோயமுத்தூர்	3—00
22.	சுப. உடையப்பா	அப்பதூர்	20—00
23.	ஆர். கந்தசாமி	சுஞ்சப்பன்பட்டி	3—25
24.	ந. திருமலை	ஒட்டநாகம்பட்டி	3—25

தொடர் 7.

கைலாய வன்னியனின் நாட்டினப்பற்று

இன, மத ஒழிப்பிற்கெதிராகப் போர்க்கொடி எழுப்பி வெற்றி கண்டவன் கைலாய வன்னியன். 17-ஆம் நூற்ருண்டின் முதல் கால் பகுதியில் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரின் ஆளுமைக்குட்பட்டது. யாழ் அரசைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர்—வன்னி அரசர்களிடமிருந்து, பெருமளவில் திறைகளைப் பெற்றுக் கொள்ளவும், அவ்வரசுகளின் மேல் மேலாண்மை செலுத்தவும் முற்பட்டனர். அக்காலக் கட்டத்தில் வன்னி நிலத்தில் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட ''பனங்காமத்தை'' ஆட்சித் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் கைலாய வன்னியன். இவன் போர்த்துக்கேயரை முழுமூச்சாக எதிர்த்து, அவர்களுக்கு அடிபணியாது போரிட்டு வெற்றி கண்டான்.

வன்னியக் கண்ணகி வழிபாடு

இவன் காலத்தில் வன்னியில் இயற்கை வழிபாடும், கண்ணகி வழிபாடுமே முகாமை பெற்று விளங்கியது. தைப் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி மக்கள் மகிழ்ந்தனர். கற்புக்கரசி கண்ணகிக்குச் சிலையெடுத்துப் பரந்த அளவில் வழிபட்டனர். முள்ளியவளை, கல்லிருப்பு, ஒட்டிசுட்டான், தண்ணீரூற்று, கொக்கிளாய், புதுக்குடியிருப்பு, ஆகிய இடங்களில் கண்ணகி வழிபாடு போன்றவற்றை இன்றும் சிறப்பாக கொண்டாடுகின்றனர். மதுரையை எரித்தும்சினம் தணியாத கண்ணகி பத்தாவது இடமாக வந்து அமர்ந்த இடம்தான் பத்தாப்பளை என வழங்கப்பட்டு இன்று வற்ருப்பளை ஆகியது எனச் செவிவழி மரபுக் கதைகள் இன்றும வன்னியில் உண்டு. இவ்விடத்தில் ஈழத்தின் எல்லாப் பகுதி மக்களும் இன்றும் வழிபடும் வழக்கமுண்டு.

சேரன் செங்குட்டுவன் தமிழ்நாட்டில் கற்புக்கரசி கண்ணகிக்குச் சிலையெடுத்து வழிபட்டான். தமிழீழத்தில் கயவாகு மன்னன் அப்பததினி வழிபாட்டைத் தொடங்கி வைத்தான் எனச் சிலம்பு கூறுகின்றது. தமிழீழ மன்னன் கயவாகுவினுல் செய்யப் பெற்ற செப்புக் கண்ணகி சிலை, பிரித்தானியரால் கடத்திச் செல்லப்பட்டு இங்கிலாந்தில் இன்றும் தொல் பொருள் காட்சி அகத்தில் வைக்கப் பெற்றுள்ளது. இ'து இதை மெய்ப்பிப்பதும், குறிப்பிடத்தக்கதுமாகும்.

1678 ஆம் ஆண்டில் கைலாய வன்னியன் இறந்தான். வன்னி மக்கள் வலிமை கொண்ட ஒரு பெருந்தலைவனை இழந்தனர்.

இவ் வெற்றிடத்தை நிரப்ப 'மரியா செம்பத்தை' என்னும் பெயர் பெற்ற 'நல்ல நாச்சியார்' என்ற அரசி, ஆட்சிப் பொறுப்பேற்ருள். அவள் தன் அரச இருக்கைக்குச் சுமையாக இராது, படைகளை அமைத்துக் களம் புகுந்தாள். முப்படைகளுக்கும் தலைமை தாங்கி, ஒல்லாந்தரை (Dutch) எதிர்த்து வெற்றிகண்ட முதல் தமிழ்ப் பெண் 'நல்ல நாச்சியார்' ஆவார். ஈழத்தின் வேறு எப்பகுதியிலும் இல்லாத எதிர்ப்பு வேற்று வருக்கு எதிராக வன்னியில் காட்டப்பட்டுள்ளது. இவளது படையில் சேர்ந்து பல பெண்கள் களம் புகுந்தனர். இவ்வாறு நாட்டைக் காக்கப் பெண்கள் களம் புகுந்தமையால், அப்பெண்கள் பெயரில் கோவில் கட்டி வழிபட்டனர் வன்னியர். 'அந்நாச்சிமார் வழிபாடு' இன்றும் ஈழத்தில் தொடர்கிறது.

பண்டார வன்னியனின் போர் முரசு

வன்னி நாட்டின் உறுதிமிக்க இறுதி மன்னன் 'குலசேகர வைரமுத்து பண்டார வன்னியன்'' ஆவான். இவன் முல்லைத் தீவைத் தலைநகராகக் கொண்டு வெள்ளையனை விரட்டி அடித்த மறவன். ஆங்கிலேயர் கண்டியரசைக் கைப்பற்ற முயன்ற போது அதை எதிர்த்து அன்றைய கண்டி மன்னனுன ''சிறி விக்கிரம இராசசிங்கன்'' எனப் பெயர் பெற்ற ''கண்ணுசாமி'' போர் தொடுத்தான். அவ்வேளை கண்ணுசாமிக்குத் துணையாகப் பண்டார வன்னியன் தன் படையை அனுப்பிக் கண்டி அரசின் வெற்றிக்கு உதவினுன். இதனுல் சினமடைந்த வெள்ளையர், வன்னி அரசின் மேல் போர் தொடுக்க எண்ணி முல்லைத் தீவின் கடற் கரையில் கோட்டை அமைத்தனர். இதை அறிந்த பண்டார வன்னியன் தன் படைகளுடன் பதினெட்டாம் போரில் குமிழ முனையில், கற்பூரப் புல் வெளியில் பாசறையிட்டான். தகர் வெடியங்களையும், துமுக்கிகளையும் ஏந்திய ஆங்கிலப் படையை-1803 ஆம் ஆண்டு ஆகசுடு 24-ஆம் நாள் டண்டார வன்னியனின் படை முட்டி மோதியது. ''படைத் தலைவர் '' ''வொன்றிபேக்' தலைமையிலான ஆங்கிலப் படை இவ் வீரனின் வாள் வீச்சுக்கும், வில் தாக்கத்திற்கும் எதிர்த்து நிற்க முடியாது 'முல்லைத் தீவில்' இருந்து கடல் வழியாக யாழ்ப்பாணம் தப்பி ஓடியது.

"Pandara - vanniyan not only revolted against the English, but he had sent his men to strengthening the Kandiyan army to defeat the English army sent by Governor NORTH. This had infuirarated the Britishers who sent a detachment of army lead by Captain VONDRIBERG on 24th August 1803. Which was met with force by Pandara vanniyan, who in one attack had slain sixty British Soldiers and drove them up to Mullaitievu from there. The Britishers escaped by sea to Jaffina in boats". [—'Adangapattu and pandara vanniyan' — (by Dr. S. V. Pararajasingham.)]



பண்டார வன்னியனின் வாள்-கொடி உயர்ந்தது. ஆங்கிலப்படை, மீண்டும் திருகோண மலையில் இருந்து, ''படைத்தலைவர்'' எட்வேட் மேச், தலைமையில் வன்னியைத் தாக்கியது. வன்னிமேடு என்ற இடத்தில் பண்டார வன்னியன் தன் மறவர் படையுடன், ஆங்கிலேயரை முட்டி மோதினுன். வாள் கொடி மீண்டும் பட்டொளி வீசிப் பறந்தது. நேரடிப் போரில் தாக்குப்பிடிக்க முடியாத வெள்ளையர், உட்பகைவரின் துணையுடன் ஆட்சி செய்யத் தொடங்கினர். 'கரிக்கட்டுமூலை' என்ற வன்னியப் பகுதியை ஆண்ட தன்னுணர்வற்ற சிற்றரசனைத் தம் வயப்படுத்தினர் வெள்ளையர். அவனது கருத்துப்படி யாழ்ப்பாணத்தில் இருந்து 'சோன் யூபேல்' தலைமையில் வலி நிறைந்த ஒரு படையும், திருகோணமலையில் இருந்து, முன்பு புறமுதுகிட்டோடிய—படைத் தலைவர் ''எட்வேட்மேச்'' தலைமையில் இரண்டாம் படையும், தலைமன்ஞரில் இருந்து படைத் தலைவர் 'வொன்றிபேக்' தலைமையில் ஒரு படையும் மும்முனைத் தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டனர்.'

(தொடரும்)

"முகுந்தன்"
செயலதிபர், ''தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்''

தமிழா ! - கவனம்! விழிப்புறு !! எழுச்சிகொள் !!!

உன் இனம் சிதைத்தொழிக்கப்பட. அறிகுறிகள் தெளிவாகவே தோன்றத் தொடங்கிவிட்டன. முயற்சிகள் முனைப்பாகவே தொடங்கி விட்டன. தமிழரின் அறிவாற்றல் மீது சிந்தனைச் சிதைப்பு என்னும் போரை நச்சு ஆற்றல்கள் தொடுத்து விட்டன.

கவனமாகக் கேள்—பொள்ளாச்சி மகாலிங்கம், வள்ளலாரின் மெய்ம்மக் கருத்துகளை ஏற்ற தமிழர். 'தமிழ்... தமிழ்' என தவருது எங்கும் கூறுபவர், கூறுகிருர் ''சங்கொலி'' (20-1-83) மாதமிருமுறை ஏட்டில்:

''பஞ்ச திராவிடம் என்று அழைக்கப்பட்ட பரப்பில் விந்திய மலைக்கு வடக்கே உள்ள குசராத்தும், மராட்டியத்தின் ஒரு பகுதியும் சேர்ந்தே இருந்தன. ஆனுல் நம்மில் சிலர் வடக்கே ஆரிய இனமும், தெற்கே தமிழ் மொழியும் என்று பேசி வந்துள்ளனர். ஆனுல் உண்மையில் சமசுககிருதமே தமிழனுடைய மொழியாக உள்ளதை அவர்கள் அறிய மாட்டார்கள்''... (''இந்து சமயமும் தமிழ் மொழியும்'').

திரு. மகாலிங்கம் அவர்கள் தமிழ்நாட்டு பண்பாட்டைப் பாதுகாக்க என்று கூறிக் கொண்டு ஒரு மாதிகையை வெளிக் கொண்டு வந்துள்ளார். இதற்குப் பகீரதன் என்பவரை ஆசிரியராக அமர்த்தியுள்ளார். இந்தப் பகீரதன் ஏற்கனவே'குமுதம்' வார ஏட்டில் (31-9-1981) ''சமசுக்கிருத மொழி தமிழ் மக்களால் செய்யப்பட்டது'' என்றும், 'தொல்காப்பியத்தின் சில மெய்ம்மங்களின் நுட்பங்களை விளக்கித் தமிழ் அறிஞர்கள் (யார் இவர்கள் ? பெயரென்ன? எந்தக் காலத்தவர்?) தாங்கள் புதிதாக உருவாக்கிய வடமொழியில் — அஃதாவது சமசுக்கிருதத்தில் எழுதியது ரிக்வேதம்'' ...என்றும், ''வடல் மொழியை, வடு+அல்+மொழி என்று பிரித்துப் பொருள் காணல் வேண்டும். இதற்கு ஓசைக் குற்றமில்லாத மொழி என்று பொருள். வடல்மொழி காலத்தால் வடமொழியாகத் திரிந்தது. இது புரியாமல் வடமொழி என்ருல் வடக்கில் இருந்து வந்த மொழி என்று, தமிழ் மரபு தெரியாத தமிழ்ப் புலவர்கள் இன்றும் சொல்லி மொழித் 'துவேஷ'த்தை வளர்த்து வருகிருர்கள்''... என்றெல்லாம் கருத்துச் சொல்லி அங்கலாய்த்தவர்.

இவர்களைப் போன்றவர்கள் இன்று ஒருங்கிணைந்துள்ளனர். ஆனுல் மறைமலையடிகளார், தேவநேயப் பாவாணர் ஆகியோரின் மரபுவழி இன, மொழி நலன் பேணுவோர் ஒருங்கிணைவதிலலை. அங்குப் பணமும் பார்ப்பனீயமும்' அணி திரள்கிறது. ஆனுல் பகுத்தறிவுக் கொள்கையும, பொதுமை உணர்வும், தமிழ் இன, மொழிப் பற்றுக்கொண்டோரும் பிளவு பட்டே உள்ளனர். இதன் விளைவு எப்படி இருக்கும்?

தமிழா—கவனம்! விழிப்புறு!! எழுச்சி கொள்!!!

—தா. செல்வன்.



தென்னார்க்காடு வட, தென் மாவட்டங்களின் உ.த.மு.க. செயற்குழுக் கூட்டம்!

திருக்கோயிலூரில் கூடிக் கழகச்செயற்பாடுகளை ஆராய்ந்தது!

உ.த.மு.க. தென்னார்க்காடு மாவட்ட (இருபகுதியும்) செயற்குழுக் கூட்டம் திருக்கோவிலூரில் சுறவம்—கரு மாலை 3.30 மணியளவில் வடபகுதித் தலைவர் திருமிகு. தமிழவேள் க.மு அவர்கள் தலைமையில், கழக முதல்வர் பாவலரேறு அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வருமாறு:

1) மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை 2) ப. அருளி புதுச்சேரி 3) மா.செ. தமிழ்மணி நெமிலி 4) தமிழநம்பி விழுப்புரம் 5) கூ.சா. இராமலிங்கம் அவலூர்பேட்டை 6) சுப. திருமாறன் நெய்வேலி 7) செ. புகழேந்தி கள்ளக்குறிச்சி 8) சி. கதிர்வேலு திருக்கோவிலூர் 9) மா. இறையன் திருக்கோவிலூர் 10) மு. திரிசங்கு திருக்கோவிலூர் 11) அ. நக்கீரன் விழுப்புரம் 12) சின்னத்துரை நெய்வேலி 13) இரா. திருவாணன்(சீனிவாசன்) விழுப்புரம் 14) தே. குமார். திருக்கோவிலூர் 15) கு. கணேசன் திருக்கோவிலூர் 16) ச. மயிலப்பன் வயிரபுரம் (திண்டிவனம்) 17) ந. தமிழவேள் திருக்கோவிலூர் 1) விழுப்பரையன் விழுப்புரம் 19) நா. அன்பழகன் திருக்கோவிலூர்.

தலைவர் தமிழவேள் அவர்கள் உரையில் பாவலரேறு அவர்களின் தொண்டின் சிறப்பைக் கூறும்பொழுது, பெரியாருக்குப் பிறகு 'இவரைத்தான் நாம் நம்பியிருப்பதால் இறுதிவரை உறுதுணையாயிருப்போம் என்று குறிப்பிட்டார்.

வடபகுதி மாவட்டச் செயலர் விழுப்பரையன் அவர்கள் வரவேற்புரையில் வடபகுதியில் இரு வட்டங்களில் மட்டுமே அமர்த்தம் செய்யவேண்டியுள்ளது என்றும் அவற்றிற்கும் விரைவில் அமர்த்தப்பட்டுவிடும் என்றும் கூறினார். விடைத்திங்களில் மாவட்ட மாநாடு நடத்துதற்கு ஒத்துழைப்புத்தர வேண்டினார். அத்துடன் பலரும் உறுப்பினராய்ச் சேர மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

கழக முதல்வர் பாவலரேறு அவர்கள் கழக நெறிமுறைகள் எவ்வகையாலும் மார்ச்சு இறுதிக்குள் எழுதப்பெற்று ஏப்பிரல் இறுதிவாக்கில் அணியமாகிவிடும் என்றும், உலகத் தொழிலாளர் நாளில் அனைவர்க்கும் கிடைத்துவிடும் என்றும் அதன்பின்னர் தாங்களாகவே முன்வந்து உறுப்பினராக விரும்புவர்களை உறுப்பினர்களாக்கிக் கொள்ளவேண்டும் என்றும், உறுப்பினர் சேர்த்தல் எளிதான ஒன்றாயிருக்கலாகாது என்றும் குறிப்பிட்டார்கள். இத் தலைமுறையிலேயே நாம் எதிர்பார்க்கும் விளைவு கிடைக்குமென்றோ நம்முடைய தனிப்பட்ட நலன் கருதியோ இவ்வமைப்பு தொடங்கப் பெறவில்லை யென்றும், பின்னைய தலைமுறைகளிலாவது நம்முடைய எண்ணங்கள் நிறைவேறும்வண்ணம் கட்டுக்கோப்பாக அமைக்கப் பெறுகின்றது என்றும் இவ்வெண்ணம் அனைவர்க்கும் வரவேண்டும். தனியொருவரே சுமப்பதாக இருக்கக் கூடாது என்றும் கூறினார்கள்.

தென்பகுதிச் செயலர் புகழேந்தி மூன்று வட்டங்கட்குப் பொறுப்பமாததம் முடிந்துள்ளன வென்றும் பிறவட்டங்கட்கும் விரைந்து முடிப்பதாகவும் குறிப்பிட்டார். அப்பொழுது பாவலரேறு அவர்கள் பிறவட்டங்கட்கும் பொறுப்பாளர் அமர்த்துதல் தலைமை என்று அமர்த்துவது எளிதென்றும் ஆயின் மாவட்ட நிலையிலுள்ளோரே முயன்று செய்தால் தான் அமைப்புவளர்ச்சிக்குச் சிறப்பும் வலிவும் ஆகும் என்றும் கருதித்தான் சில பகுதிகளை அமர்த்தாமல் மாவட்டப் பொறுப்பில் விடப்பட்டது. என்றும் கூறினார்கள் நம் செய்தியாசிரியர்கள் பலரிடமிருந்தும் நம்மொழி இன அல்லது எதிர்ப்பான நிலைகளிலும் உள்ள செய்திகள் வரவில்லையென்று வருத்தமாகக் கூறினார்கள். செய்திகள் நம்மைத்தேடிவரா என்றும் நாம்தான் தேடிப்பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

இனமொழி நலனை தனிப்பட்ட நிறுவனங்கள் கூட பிற இனத்தவரிடையே முனைந்து வளர்த்தல் போல்,நம்மவர்களும் நம்மவர்நடத்தும் நிறுவனங்கள் சார்பில் மொழி இனநலங் கருதிப் போட்டிகள் வைத்து ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் இயக்கம் மக்களைத் தேடிப் போகவேண்டுமே தவிர மக்கள் இயக்கத்தைத் தேடிவாரார் என்றும் கூறினார்கள்.

இறுதியில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

தீர்மானம் 1.

தமிழ்நாட்டில் வணிக விளம்பரப் பலகைகள், இதழ்கள், செய்தித்தாட்கள் முதலிய எல்லாவற்றிலும் மொழிக்கலப்புச் செய்தும், மொழியைச் சிதைத்தும் வருவதை இம் மாவட்டக் குழு கடுமையாகக் கண்டிப்பதோடு இவற்றைத் தடுக்க 'தமிழ்மொழிக் காப்புச் சட்டம்'கொண்டுவந்து மீறுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்கத் தமிழக அரசினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது. முன்மொழிந்தவர்: விழுப்பரையன் விழுப்புரம். வழிமொழிந்தவர். உலகமுதல்வன் திருவண்ணாமலை.

தீர்மானம் 2.

இந்தியாவிலேயே, தமிழகத்தில் மட்டுமே மிகப்பெருவாரியான பரிசுச்சீட்டு விற்பனை நடக்கின்றது. பல அயல் மாநிலங்களின் பரிசுச்சீட்டு விற்பனையால் தமிழக ஏழை எளிய நடுத்தர மக்கள் கொடுமையாக இன்று சுரண்டப்படுகின்றனர். இந்த அயல் மாநிலச் சுரண்டலைத் தடுக்கத் தமிழக அரசு 'பரிசுச்சீட்டு விற்பனைத் தடைச் சட்டம்' கொண்டுவர வேண்டுமென இம் மாவட்டக்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

முன்மொழிந்தவர் : அ. நக்கீரன், விழுப்புரம்.
வழிமொழிந்தவர் : தமிழ்மணி, நெமிலி.

தீர்மானம் 3.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பெயரில் நடத்துகின்ற போக்குவரத்துக்கழகப்பேருந்துகளிலேயே மூடநம்பிக்கையை வளர்க்கும் சப்பி எறிந்த பனங்கொட்டை உருவமும், படிகாரக் கற்றாழைக் கயிறுகளும், அலங்கோலமான அருவருப்புள்ள பூசணிக்காய் உருவமும் தொங்கவிடப்படுவதை இம்மாவட்டக்குழு மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு இத்தகைய இழிவுகளை உடனடியாக நீக்க விரைந்த நடவடிக்கையை மேற்கொள்ள தொடர்புடைய மேலாண்மை இயக்குநரையும் அரசையும் கேட்டுக் கொள்கின்றது.

முன்மொழிந்தவர் . கூ.சா.இராமலிங்கம், அவலூர்பேட்டை.
வழிமொழிந்தவர் : இறையன், திருக்கோவலூர்.

தீர்மானம் 4.

அண்மையில் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் சென்ற பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அக் கோவிலிலும் கோவிலுக்குச் செல்லும் நடைபாதை வழியெங்கிலும் கொலை, கொள்ளைத் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். நேரில் கண்ட பலராலும் தமிழகமெங்கும் பேசப்படும் இச் செய்தி செய்தித்தாட்களில் இருட்டடிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசு ஒரு 'பொது உசாவலுக்கு' ஏற்பாடு செய்து உண்மையை வெளிப்படுத்தி இத்தகைய கொடுமைகள் இனியும் நிகழாவண்ணம் தக்க நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இம்மாவட்டக்குழு வற்புறுத்தி கேட்டுக் கொள்கின்றது.

முன்மொழிந்தவர் : சி. கதிர்வேலு, திருக்கோவிலூர்.
வழிமொழிந்தவர் : சின்னத்துரை, நெய்வேலி.

தீர்மானம் 5.

திருக்கோவலூரிலிருந்து முகையூர், மணலூர்ப் பேட்டை வழியாக துருகம் திருவெண்ணெய்நல்லூர் பகுதிகளுக்குப் பல தனியார் பேருந்துகள் ஓடியும் மிகுந்த கூட்ட நெரிசல் இருக்கின்ற நிலையில் 'தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்' இப்பகுதிகளுக்குத் திருக்கோவிலூரிலிருந்து நகருந்து' (Town Bus) விடவேண்டும் என்று போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநரையும் தமிழக அரசினையும் இப் மாவட்டக்குழு மிகவும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றது.

முன்மொழிந்தவர் : புகழேந்தி, கள்ளக்குறிச்சி.
வழிமொழிந்தவர் : இரா. சீனுவாசன் விழுப்புரம்.

தீர்மானம் 6.

தென்னார்க்காடு மாவட்டம் முழுமையும் கடும் வறட்சியினால் தாக்குண்டு நிலங்கள் வெடிப்புற்றும், பயிர்கள் கருகியும், நீர் நிலைகள் வற்றியும் கால்நடைகள் குடிக்கவும் நீரின்றி இருக்கும் நிலையில் இருப்பதால் இம்மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்றும், போர்க்கால நடவடிக்கை போல் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கவும் பிற உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தமிழக அரசை இம் மாவட்டக்குழு கேட்டுக் கொள்கின்றது.

முன்மொழிந்தவர் : திருமாறன், நெய்வேலி.
வழிமொழிந்தவர் : திரிசங்கு, திருக்கோவலூர்.

தீர்மானம் 7.

தென்னார்க்காடு மாவட்ட உலகத்தமிழின முன்னேற்றக் கழக முதல் மாநாட்டைத் தெற்கு, வடக்கு ஆகிய இருபகுதியினரும் சேர்ந்து விரைவில் இருநாட்கள் நிகழ்ச்சியாக நடத்துவதென்று மாவட்டக்குழு தீர்மானிக்கிறது.

சேலம் மாவட்ட உ.த.மு.க. அன்பர்குழு கூடிச் செயற்பாடுகளைத் திட்டமிட்டது!

தமிழ்நிலம் 23-1-83 கிழமை இதழில் வெளியிட்டபடி, சேலம் மாவட்ட உலகத்தமிழின முன்னேற்றக் கழக அன்பர்களின் கலந்துரையாடல் கூட்டம் (ஒன்று) சென்ற ஞாயிறு (3 -1-83) அன்று காலை 10-மணி அளவில் தொடங்கியது. திருவாளர்கள் இல. அருட்செல்வன். கி. தமிழமுதன், மா. செவ்வேள், கா. பழனிச்சாமி, பாவை. க அன்பின்பன், பழ. பாலுமணி, க.பாபு, தமிழ்த்தென்றல், க. தங்கவேல். மு.பழ. சதாசிவம், பெ. மாது முதலியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்கள் பொதுவான இயக்கக் கருத்துகளையும், செயற்பாடுகளையும் குறித்து அளவளாவிக்கொண்டிருந்த பின்னர் ஒரு மனதாகக் கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

தீர்மானம் 1.

'செந்தமிழ்ச் செல்வி' திங்களிதழின் ஆசிரியரும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சியாளருமான, 'செந்தமிழ்ச் செல்வர். வ. சுப்பையா(பிள்ளை)' அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து இக்குழு தனது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவிக்கிறது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

இலண்டன் மடல்

திரு.வி.க. நூற்றாண்டு விழா கொண்டாடப் பெறும்!

தமிழ்நிலத்திற்குத் துணை நிற்போம்!

அன்புள்ள ஐயா வணக்கம். தமிழ் நிலம் தொடர்ந்து கிடைக்கிறது. நன்றி தமிழர் திருநாள் தொடர்பான வேலைகள் முடிந்தவுடன் பலரை உறுப்பினர்களாகச் சேர்த்துப் பணம் விடுக்கின்றோம்.

திரு. வி. க புறக்கணிக்கப்படும் செய்தியினைத் தமிழ்நிலம் வழி அறிந்து, துயர் உற்றோர். இங்குக்கூட தமிழக இந்திய அரசுகளின் சார்பாகப் பாரதிக்கு விழா எடுத்தார்கள்.

தமிழ் நிலம் வழிச் செய்தியறிந்த உடன், நம கழகத் தோழர்கள் தமிழ்த் தென்றலின் நூற்றாண்டு விழாவை மிகவும் சிறப்பான முறையில் எதிர்வரும் 27.8 83 ஆம் பக்கலில் கொண்டாடிட ஏற்பாடுகள் தொடங்கி விட்டனர். விழா மேலும் சிறக்க தங்கள கருத்தைத் தெரிவியுங்கள்.

தமிழ்த் தென்றல் திரு. வி க. நூற்றாண்டு விழா மலர் ஒன்றும வெளியிட எண்ணியுள்ளோம்.

நமது விழாவில் இங்குள்ள பல நாட்டுத் தூதர்களையும் இந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இன்னும் பலரையும் பங்கு கொள்ள அழைத்துள்ளோம. அப்போது இலங்கையில் உள்ள மலையகத் தமிழர்களின் நிலையை விளக்கியும் அவர்களுக்குக் குடியுரிமை கொடுக்கும்படி இலங்கை அரசை நெருக்கவேண்டுமென்றகோரிக்கையைக் கையளிக்கவும் உள்ளோம். விழாமுடிந்தவுடன் விளத்தங்களைத் தங்களுக்கு விடுக்கின்றோம்.

'தமிழ் நிலம்' மிகவும் சிறப்பாக உள்ளது. தடையின்றி வெளிவர வேண்டும் என்பதே இங்குள்ளோரின் பேராவல் அதற்கு நாங்கள் என்றும் துணை நிற்போம்.

26-12-82 ஆம் நாளைய தமிழ் நிலத்தின் நான்காம் பக்கம் தெரியுமா செய்தி, 'இலண்டனில் குளிர் காலத்தில் பிற்பகல் 9 மணி வரையிலும் நல்ல வெளிச்சமிருக்கும், ஆனால் கோடை காலத்திலோ 4 மணிக்கே இருட்டி விடும் எனபது சரியன்று இலண்டனில் கோடைகாலத்திற் பிற்பகல் 10 மணி வரையிலும் நல்ல வெளிச்சமிருக்கும் ஆனால் குளிர் காலத்திலோ 3 மணிக்கே இருட்டிவிடும்.

இலண்டன்
4-1-83

அன்புள்ள
— **வீரசிங்கம். இலண்டன்**

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் **காரி, ஞாயிறு** ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று வரவும்.

— **அமைச்சர்.**

இந்தியாவிற்குக் கூட்டாட்சி!

இந்தி பேசாதவர்கள் இரண்டாந்தர மக்கள்!

தமிழீழ விடுதலை உள்நாட்டுத் தீர்வு!

இரா.செழியன் (நா.உ.) நேருரை

குளித்தலை, பெரியபாலம் சண்முகம் (பிள்ளை) நினைவு நிழற்கூடத்தைத் திறந்து வைகக சனதா பேரியக்க நாடாளுமன்ற உறுபபினா இரா. செழியன் வந்தார். சண்முகம் (பிள்ளை) மூத்த மகன் சீனிவாசன் அவரை வரவேற்றுத் தம் தேங்காய் மண்டித் தங்கும் கூடத்தில் விருந்தளித்தார்.

அப்போது நான் அவரைப் பார்த்து நேருரை ஆற்ற ஒருவர்மூலம் இசைவு கோரினேன். இரா. செழியன நா.உ. அதற்கு இசைந்து ஒரு மெத்திருக்கையில் அமர்ந்தார். நானும் உடன் அமர்ந்தேன்.

திராவிட இயக்கத்திலிருந்து தேசிய இயக்கத்திற்கு மாறி வந்தவர் இரா. செழியன். ஏதோ உயர்ந்த நோக்கோடு அவா தேசிய இயக்கத்தில் கலந்துள்ளார் என்பது எனக்குப் புரிந்தது. நான் விடுத்த வினுக்களுக்கு நிலைதவறி விடாமல் பொறுத்துச் சரளமாக விடை கொடுத்தார்.

அவரிடம் நான் விடுத்த வினக்களுடன் அவர் கொடுத்த விடையைத் தூய தமிழ்ப்படுத்தியதால் சில சொல்தொடர் மாற்றங்களுடன், கருத்துத் தொடர் மாருமல் அப்படியே கொடுக்கிறேன்.

'காவிரிநீர் தீர்வில் தங்கள் கருத்தை அறியலாமா?' என்று நான் வினவினேன்.

'உடனடியாக ஏற்பட்டுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டிற்குத் தீர்வு (நிவாரணம்) கண்டாக வேண்டும். கருநாடக அரசிடம் பேச்சு நடத்துவேன். 1924-ஆம் ஆண்டு உடன்படிக்கை இப்போது இல்லை. நீண்டகால அடிப்படையில் நீடித்த உடன்படிக்கை (ஒப்பந்தம்) தேவை. இராமகிருட்டிண கெ.:டேவிடம் கலந்து எந்த அளவு உதவ முடியுமோ அந்த அளவிற்கு உதவக் கேட்டுக் கொள்ள இருக்கிறோம்.' என்று விடை அளித்தார் செழியன்.

'இந்திச் சிக்கலைப்பற்றித் தாங்கள் என்ன கூறக் கருதுகிறீர்கள்.' என்று கேள்வி விடுத்தேன்.

'இந்திச் சிக்கல் (பிரச்சனை) அடிக்கடி தலை எடுக்கிறது. இந்திரா ஒருபுறம் சொல்லுறுதிகளை கொடுத்துக் கொண்டே மறுபுறத்தில் நிறைவேற்ருமல் இருக்கிருர். இந்தி பேசாத மக்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லர் (இந்தியாவின்) பல்வேறு பகுதிகளிலும் இருக்கிருர்கள். அவர்கள், தங்களை இரண்டாந்தர மக்களாக நடத்தப் படுகிருர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு இடமில்லாமல் நடுவணரசு (மத்திய அரசு) நடந்து கொள்ளவேண்டும். உடனடியாக மக்களுக்குத் தீர்வு அளிக்க வேண்டும். அசாம், வடகிழக்கு, தெற்கு, சம்மு. காசுமீர் போன்ற பகுதி இந்தி பேசாத மக்கள் எதிர்ப்பு வலிவுடனும், வெளிப்படையாகவும் எழத் தொடங்கி இருக்கிருர்கள்.

இதற்கு தகுந்த அமைவு (சமாதானம்) நாடாளுமன்ற முறையிலும், அரசியல் சட்டத்திலும் தந்தாக வேண்டும். இந்திமொழி பேசுபவர்கள (ஆதிக்க) வல்லாண்மை உணர்வை ஏற்படுத்தும்வரை மொழிச்சிக்கல் இருக்கும். வெளிநாட்டுத் தொடர்பிற்கும், தொழில் நுட்ப வளர்ச்சி பெறுவதற்கும் ஆங்கிலம் உறுதுணையாக இருக்கிறது. இந்த நல்ல சூழலை (சாதனத்தை)க் கெடுப்பது இந்தியாவிற்கும், குறிப்பாக இந்தி பேசுகிற மக்களுக்கும் கூட நல்லதன்று' என்று கூறிய இரா. செழியன், மேலும் கூறினுர்.

'இந்தியாவிற்குத் தனியாக ஒருமொழி என்பது வரலாற்றை மீறிய ஒரு விருப்பமாகும். ஒரே மொழி மெய்மம் வலியுறுத்தப்பட்டால், மற்ற மொழி பேசுகிறவர்களுக்கு நீடித்த வெறுப்பையும், வேற்றுமையையும் உருவாக்கும். ஒரேமொழி பேசிச் சண்டைபோட்டு பிளவுபட்ட நாடுகள் இருக்கின்றன; பலமொழி பேசி ஒற்றுமையாக இருக்கும் நாடுகளும் இருக்கின்றன.

ஊராட்சி, வட்டார, அளவிற்கு அதிகாரம் பாகினுல் நடுவணரசுடன் தொடர்புகொள்ள எளிய (சாதாரண) மாந்தர்களுக்கு மொழி தேவை (அவசியம்) இல்லை. தாய்மொழியே போதுமானது. எந்தத் தீர்வுகளையும் ஊராட்சி வட்டாட்சி அளவில் தாய்மொழி மூலமே தீர்த்துக் கொள்ள முடியும்.

'இன்றைய நடுவணரசு போக்கால் இந்தியாவின் எதிர்காலம் பற்றி தங்கள் கருத்தை அறியலாமா?' என்று கேட்டேன்.

இரா. செழியன் விடைகூறினுர். 'மாநிலங்களுக்குத் தாப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான பொருளேந்துகளும் (நிதிவசதி) அதிகாரங்களும் தரப்பட வேண்டும். இப்போதுள்ள அமைப்பில் மாநிலங்களுக்கு பொறுப்புகள் அதிகம்; ஏந்துகள் (வசதிகள்) இல்லை.

இந்தியா கூட்டாட்சி அமைப்பில் வரவேண்டும். மொழி, இன, பணபாட்டு (கலாச்சார) வரலாற்று உணர்வு ஒற்றுமையில் நடுவணரசு வலிவுள்ளதாக இருக்கக் கூட்டாட்சி அமைப்பே சிறந்தது. கூட்டாட்சி என்பதால் வலிவான மாநிலங்கள் வலிவான நடுவணரசிற்கு எதிரியாகா. இந்திராகாந்தி செய்த தவறுகளால்தான் மாநிலங்கள் வலிவற்று இருக்கின்றன. வலிவற்ற மாநிலங்களால்தான், வலிவற்ற நடுவணரசாக இருக்கிறது".

இரா. செழியனின் உள்ளார்ந்த கருத்தை ஆழ்ந்து எண்ணிப் பார்த்தேன்.

மேலும் என் வினவைவிடுத்தேன் 'தமிழீழவிடுதலைக் கிளர்ச்சிப் பற்றி தாங்கள் கருதுவது என்ன?'

'அது உள்நாட்டு தீர்வு. (சிக்கல் — நிவாரணமாக கொள்ளலாம்) என்று நிறுத்தியவா, பின தொடர்ந்து கூறினுர்.

'(இலால்பகதூர்) சாத்திரியார் — சிறிமாவோ உடன்பாடு நிறைவேற்றப்படவில்லை. காலக்கெடு முடிந்துவிட்டது. அதை நிறைவேற்றி இலங்கைத தமிழர்களுக்கு, உரிய உரிமைகளைத் தந்து இந்தியா விற்கு வருகிற (தமிழ) மக்களுக்கு உரிய மறு (புனர்) வாழ்வு தருவதற்கான, பொறுப்பு இந்திய அரசிற்கு உண்டு. அதை அவர்கள் நிறைவேற்ற முன் வர வேண்டும். மாந்த உரிமைக்குத் தீங்கிழைக்காமல் இலங்கை அரசு நடந்து, நம்பிக்கையையும், அந்த நாட்டின் ஒருமைப்பாட்டில் பிடிப்பையும் ஏற்படும்படி நடந்து கொள்ள வேண்டும்."

அவருடைய உள்ளுணர்வைப் புரிந்து கொண்டு எண்ணியபடி இருந்த என்னை, ஒரு சனதா அன்பர் ஒரு கேள்வி கேட்க தூண்டினுர். நானும் கேட்டேன் 'அசாம் சிக்கலைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?''

அசாமில் நடைபெறும் தேர்தல் மக்களாட்சி (சனநாயக) முறைக்கும், தேர்தல் சட்ட (விதி) முறைக்கும் புறம்பானது. இதனுல் கிளர்ச்சி எழுந்துள்ளது. வெளியார (அந்நியா) பெருவாரியாக இடம் பெற்றுள்ளனர் என்பதே குற்றச்சாட்டு. அரசு அதை ஏற்று புலனாய்வு நடத்தும்போது தேர்தலை அறிவித்தது, அரசியல் கீழ்மை. 4 ஆண்டுகளாகத் திருத்தப்படாத ஒப்போலையாளர் பட்டியலை வைத்துத் தேர்தலை நடத்துவது தவறு. தேர்தல் நடத்துவதற்கான உரிமைச் சூழ்நிலை கிடையாது அடக்கு முறை, ஆள் தூக்கிச் சட்டங்களும் கட்டாயம் ஓர் அமைதியான சூழ்நிலையை எதிர் கட்சிகளுக்கு தர முடியாது. எதிர் நிகழ்வாகக் கடைசி நாடாளுமன்றத் தொடரில் சனதா சார்பில் ஒரு கருத்தைத் தந்தோம். தேர்தலை ஒத்திப் போடுவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒத்துழைப்பைத் தருவதாகக் கூறினேம்.

கருத்துரையாடாமல் (பேச்சு வார்த்தை நடத்தாமல்) கருத்தை (யோசனையை) ஏற்காமல் திடீர் என்று தேர்தலை அறிவித்து இருப்பது மோசடியே ஆகும். இதன் விளைவை பட்டே (அனுபவித்தே) ஆகவேண்டும்.

கூட்டம் கூடி விட்டதாலும், நேரம் மிகுந்து விட்டதாலும், நிழற்கூடத்தை திறக்க குறிப்பிட்ட நேரத்தைக் கடந்து விட்டதாலும், நான அவரிடமிருந்து விடைபெற வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. விடை பெற்றேன். அவர் விடை கொடுத்தார், எழுந்தார்.

— அறிவின் முனைவன்

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

2\. நடுவணரசில் மக்கள் கட்சி ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட 'மண்டல் குழு' தனது பரிந்துரையைத் தற்போதைய பேராயக்கட்சி அரசிடம் பணிந்தனுப்பி உள்ளது. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கென அளிக்கப்பட்ட சலுகைகளை உள்ளடக்கிய இவ்வறிக்கையினை நடைமுறைப்படுத்தாது நடுவணரசு, காலந்தாழ்த்தி வருகிறது. எனவே மண்டல் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வர ஆவன செய்ய நடுவணரசை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

3\. கடந்த 1976-ஆம் ஆண்டு பர்.கோ. தங்கவேலனுர் அவர்களால் எழுதப்பெற்ற 'தமிழ்நில வரலாறு' என்னும் உண்மையான வரலாற்று வெளிப்பாட்டு நூல், தமிழ்நாடு அரசால் நெருக்கடி நிலைக் காலத்தில் சில படிகளே வெளிவந்த நிலையில் தடை செய்யப்பட்டு உள்ளது. திரவிட இயக்கத்தின் உண்மையான வழித் தொடர்பாளர்கள் என்று தங்களை விளக்கப்படுத்திக் கொள்கின்ற தமிழ்நாட்டரசினர் உடனடியாக இந் நூலின் மீதுள்ள தடையினை நீக்கிடவும், இதனை வெளியிடவும் ஆவன செய்திட அன்புடன் இக்குழு கேட்டுக் கொள்கிறது.

4 இத்திங்கள் 'தென்மொழி'யில் பாவலரேறு ஐயா அவர்களின் 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்' என்னும் ஆசிரியவுரையினைபடித்து அறிந்து மிகவும் வருத்தமுறுகிறோம். ஐயா அவர்களின் தமிழ்த் தொண்டினுல்தான் இன்று தென்மொழி இயக்கம் உ.த.மு.க வாக உருவெடுக்க முடிந்தது. தென்மொழி இத் தமிழ்நிலத்தில் வெளிவந்திராது இருந்திருக்குமானுல் இக்குழுவும், இதுபோன்று உலகின் பரந்து கிடக்கின்ற பல குழுக்களும் தோன்றிடும் அரியதொரு வாய்ப்பே இத்தமிழகத்தில் மட்டுமல்லாது உலகெங்கணும் அற்றுப்போயிருக்கும். தென்மொழி அன்பர்களைத்தனி மாந்த ஒழுக்கம் மிக்கவர்களாக, இனவுணர்வு பெற்றவர்களாகப் பண்படுத்திய பெருமை 'தென்மொழிக்'கே சேரும். மேலும் பாவலரேறு ஐயா அவர்கள் தமிழின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் பணியினை 'தமிழ்நிலம்' வழிச்செய்திட இயலுமா என்று எண்ணி, ஐயா அவர்கள் அருள்கூர்ந்து தென்மொழி குறித்த முடிவினை மறுஆய்வு செய்திட, வேண்டுமென இக்குழு பணிவன்புடன் வேண்டுகிறது.

5\. வானொலி. தொலைக்காட்சியில் இந்தி படிப்படியாகத் திணிக்கப்பட்டுவருவதனை, வன்மையாகக்கண்டிப்பதுடன் உடனடியாக இவற்றினை (திணிப்பினை) நிறுத்த வேண்டும் என்று இக் குழு நடுவணரசுச் செய்தி பரப்புத் துறையினரை வற்புறுத்துகிறது.

திருநெல்வேலி (தெற்கு, வடக்கு)

உ.த.மு.க. மாவட்ட அமைப்பு மாநாடு

இடம்: காமாட்சி திருமண மண்டபம், பாரதியார் தெரு, நெல்லை நகர்.
நாள்: தி.பி. 2014, கும்பம் (மாசி) 8, (20-2-83) ஞாயிறு

நிகழ்ச்சி நிரல்

கருத்தரங்கம் — காலை 10 மணி

தலைமை: பேரா.பா.வளவரசு க.மு.
தூய யோவான் கல்லூரி, பாளை.
வரவேற்பு: த. கரிகாலன, வணி. இ.,
நெல்லை (வடக்கு) மாவட்டத்தலைவர்,

பங்கேற்போர்

மொழி: புலவர் சிவசங்கு,
நெல்லை (தெற்கு) மாவட்டத் தலைவர்,
குமுகாயம்: பேரா. மு. செ. அறிவரசன், க.மு.,
அரசியல்: சேக்கிழார் வா. கணேசன்,
பொருளியல்: அ. தமிழனபன்,
நெல்லை (வடக்கு) மாவட்டச் செயலர்.
கலை: புலவர். இராசகோபாலன்
அறிவியல்: பேரா. சங்கரவள்ளி நாயகம் க.மு.
பண்பாடு: பேரா. இளம்பிறை மணிமாறன் க.மு.
நன்றியுரை: சங்க—தமிழ்ச்செல்வன்

பாட்டரங்கம் — பிற்பகல் 2-30 மணி

வரவேற்புப்பா: கலைச்செல்வன்.
தலைவர், உ.த.மு.க. கடையநல்லூர்
தலைமை: பேரா. அ.செகதீசன் க.மு.

பங்கேற்கும் பாவலர்கள்

மொழி: புலவர் ஆ. முத்துராமலிங்கம் க.மு.
குமுகாயம்: செ.ப. மணிமாறன் அறி.இ.
அரசியல்: புலவர் மு.அ.கி. காத்திராசன்
பொருளியல். இரா.பாண்டியன் கடையநல்லூர்
கலை: பாலசுப்பிரமணியன கடையநல்லூர்
அறிவியல்: பேரா. ஆழ்வார் க.மு.
பண்பாடு புலவர் நா.புகழேந்தி தூத்துக்குடி
நன்றிப்பா மு. பழனி க.மு.
செயலர், உ.த.மு.க கடையநல்லூர்

பட்டிமன்றம் — மாலை 4 மணி

வரவேற்பு செ.இப்பாரரசு
உ.த.மு.க.தென்காசி வட்டச் செயலர்
நடுவர்: சொற்செல்வர் சி.சு.மணி

தமிழின முன்னேற்றத்திற்கு உடனடித் தேவை குமுகாய மாற்றமா? பொருளியல் மாற்றமா?

அ.பழனிச்சாமி வணி.இ. பாண்டிவளவன் ச.மு.
பேரா. பொ.செ. பாண்டியன க.மு.
பேரா.பாகக்கரப்பால—பாண்டியன் க.மு.
நா.உமாதேவி க.மு. சு.செல்லம்மாள்
பர்.அ.மு.சுந்தரவிநாயகம் பேரா.நா.சி.சு.மணி
நன்றியுரை தூய அன்பறிவன்

கொள்கை விளக்கப் பேருரை (மாலை 6 மணி)
உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர்
பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள்
நன்றியுரை: சிவந்தி பொற்செழியன்,
பாளை வட்டச் செயலர் உ.த.மு.க.

ஒரு விடுதலை உள்ளம் வாழ்த்துகிறது!

'சுதந்திரன்' ஆசிரியர் கோவை மகேசன் 'தமிழ் நிலம்' இதழை வாழ்த்துகின்றார்!

எனது பெருமதிப்புக்கும் பேரன்புக்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு.

இனிய தமிழ் வணக்கம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் வார ஏடாகத் தங்களால் வெளியிடப்படும் 'தமிழ் நிலம்' முழுமையாகப் படித்து உணர்ச்சிவசப்பட்டேன்.

உலகம் முழுவதும் பரவிச் சிதறி ஒற்றுமை இழந்து, தனது தனித் தன்மையையும் பண்பாட்டையும், இழந்து ஏதிலிகளாக அல்லல்படும் ஏழு கோடி தமிழ் மாந்தருக்கும், எழுச்சியையும் தன்மானத்தையும் ஊட்டி, சாதியெனும் அமைப்பைத் தகர்த்து, மூட நம்பிக்கைகளைப் போக்கி, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயர்ந்த குறிகோள் கொண்ட குமுகாயமாகத் தமிழ்க் குமுகாயத்தை மாற்றுவதற்குத் 'தமிழ் நிலம்' முன்கையெடுத்துள்ளது. இனம் வாழ நிலம் வேண்டும் என்ற அடிப்படையில் ஏட்டுக்குத் 'தமிழ் நிலம்' என்று சூட்டியுள்ளது பாராட்டத் தக்கது. முகுந்தனின் கட்டுரைகள் தமிழீழ விடுதலைப் போரிலுள்ள வரலாற்று உண்மைகளையும் நயன்மையை (நியாத்தை) யும் தமிழ் நாட்டுமக்களுக்கு எடுத்து விளக்குகின்றன.

தமிழ் நிலம் வளர்ந்திட
தமிழ் நலம் வளரும்!
தமிழ் நலம் உயர்ந்திட
தமிழ் ஈழம் மலரும்!

உங்களன்புள்ள,
கோவை மகேசன்
ஆசிரியர்: சுதந்திரன், யாழ்ப்பாணம்.

'இந்தி' (ய) வானொலி சமற்கிருதமயமாகிறது!

ஆரிய வேதங்கள், பிற வடமொழிமறை நூல்கள் ஆகியவற்றிலிருந்து, மந்திரங்கள் அவற்றுக்கான விளக்கம் முதலியவற்றை அனைத்திந்திய வானொலியின் எல்லா நிலையங்களிலிருந்தும் கிழமைதோறும் ஒலிபரப்புவதற்கு அனைத்திந்திய வானொலி முடிவு செய்துள்ளது இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தக் கிழமை ஒலிபரப்புத் தொடங்குகிறது.

தற்பொழுது சென்னை தில்லி, பம்பாய், கல்கத்தா. நிலையங்களிலிருந்து மட்டுமே இந் நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகிறது.

அனைத்திந்திய வானொலியின் சமற்கிருத நிகழ்ச்சி ஆய்வுக்குழுவின் கூட்டத்தில் இச்செய்தி வெளியிடப் பெற்றது.

சமற்கிருத மொழிப் பாடங்களை வானொலியில் ஒலிபரப்புவதை மேலும் விரிவுபடுத்தவும், அதே சமயத்தில் புதிதாகக் கற்போர்க்குக் குறுகிய கால நிகழ்ச்சியொன்றினைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வானொலியில் ஒலிபரப்பாகும் சமற்கிருதச் செய்தியறிக்கைகளில் பயன்படுத்தப்பெறும் நடையைக், கூட்டத்தில் கலந்து கொண்ட சமற்கிருத மொழியறிஞர்கள் பாராட்டிப் புகழ்ந்தனர்.

புதிய புதிய தலைப்புகளில் நிகழ்ச்சி வழங்குவதற்கும் வானொலியினர் பயன்படுத்தும் மொழிநடை பயனுள்ளதாக உள்ளதென்றும் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(20—12—82 — இல் நடுவணரசின் செய்தித் தொடர்பு அமைச்சகம் வெளியிட்ட தாளிகைக்குறிப்பு)

-அரிமா

உ.த.மு.க. உறவுமடல்!

நாம் தமிழர்கள் என்பது எப்போது?

தமிழ்க்குமுகாயம் சாதி வெறியால் கட்டுக்கெட்டு அலைகிறது. சாதி அமைப்பை மறுக்கிற பகுத்தறிவாளரும் தலைான கருத்தில் ஊன்றி நிற்கின்றனர். இவர் சாதி அமைப்பில் எதிர்பார்க்கும் நன்மைகள் என்று சொல்லப் படுபவை:

1. கல்விபயிலும் எளிய குடும்பத்துக் குழந்தைகளுக்குப் புத்தகம், ஆடை, பண உதவி புரிதல்

2. எளிய குடும்பத்துப் பெண்களுக்குத் திருமண உதவி செய்தல்.

3. சாதி உட்பிரிவுகளிடையே உறவை வலுப்படுத்துதல்.

4. நொடிந்து போன வணிகர்க்கு உதவுதல்,

5. திருமண அரங்கம் கட்டுதல்

6 அதிகாரிகளாகவுள்ள 'தன்சாதி'க்காரர்களைப் பயன்படுத்திச் சலுகைகளை அரசிடமிருந்து மறைவாகப் பெறுதல்

மேற்குறித்த நன்மைகளைப் பெற்றுத்தர ஏற்கனவே ஏராளமான 'கட்சிகள்' இருந்து வருகின்றன

சாதிகள் கட்டு விட்டுப் போனால் தங்களின் 'குட்டு' வெளிப்பட்டுவிடும் என்பதால் 'கட்சித் தலைகள்' சாதி அமைப்புகளைக் கமுக்கமாகவும், வெளிப்படையாகவும் போற்றி வருகின்றனர் இதில் இவர்களுக்கு வெட்கமில்லை.

'சாதிகள் இல்லையடி பாப்பா'. என்று முழங்குவதிலும் இவர்கள் வல்லவர்களே!

திரைப்பட நடிகர்கள் 'வண்ணச் சுவரொட்டிகள்' மூலம் பரபரப்பான விளம்பரம் பெறுகிறார்கள்.

இவர்களைச் சாதி வளையத்துக்குள் இழுத்துப் போட்டு மேற்படி தலைவர்களிடம் காசு பெற்றும் வெட்டி ஒளிப்படம் எடுத்துக்கொண்டு தங்களையும் விளம்பரப் படுத்தி கொள்ளவும் 'செய்கின்றார்கள்.

இவ்வளவு ஏன்? பாரதியைப் 'பிராமணர் சங்கமும்' வ.உ.சி.யைப் 'பிள்ளைமார்'— தமிழ்வேள் பண்பாட்டு மன்றமும் கொண்டாடத் தலைப்பட்டுவிட்டனர்.

ஒரு சாதி 'திருமலை மன்னர்க்கும்' படிமம் அமைக்கப் பணம் திரட்டத் தொடங்கி விட்டது.

இந்தியக் குடியரசுத் தலைவர் 'எங்கள் சாதி' என்று சொல்லவும் உரிமை இருக்கிறது

இவர்கள் தங்களைத் தமிழன் — தமிழினம் என்று சொல்லிக் கொள்ள என்று அணியமாகப் போகிறார்கள்? அன்று தான் நமக்கு விடிவு விரைந்து வரும்!

—பறம்பை அறிவன்.

ஓடுகிறார் அந்தோ!

—: தமிழவேள் :—

வெண்ணெயெனச் சுண்ணாம்பை விழுங்கிடுவோர் உண்டோ?
வேகநெறி சுண்ணாம்பே! தமிழ்நெறியே வெண்ணெய்!
சுண்ணாம்பால் வாய்வயிறு வெந்துவிடல் போன்று
நீர் தூக்கும் அறிவுமனம் சிதைவுற்றுப் போக
மண்ணுலகில் வாழ்வாங்கு வாழ்வதனால் காணும்
மெய்புணர்வாம் பேரின்பத்தை எய்தாமல் தமிழர்
விண்ணுலக வீட்டின்பக் கற்பனையை நம்பி
வடமொழியின் வால்பற்றி ஓடுகிறார் அந்தோ!

பழுதென்று பாம்பினையே போயெடுப்பார் உண்டோ?
பழுதனையர் பிறரென்றால் பாம்பனையர் பார்ப்பார்!
கெழுதகைமை நட்பினராய்ப் பார்ப்பாரைக் கொண்டால்
கெடுவதுதாம் உறுதியெனும் உண்மையறி யாமல்,
உழுகின்ற மாடுகளாய், உயர்நெல்லை விட்டு
வைக்கோலைத் தின்பதுபோல் வாழ்கின்ற தமிழர்
தொழுதடிமை செய்வோராய்ப் பார்ப்பாரின் பின்னால்
தன்மதிப்பைத் துறந்தவராய் ஓடுகிறார் அந்தோ!

கானலையே நீரென்று கருதிடுவோர் உண்டோ?
கானல்தான் நடிப்பெல்லாம்! நடப்பவையே நீராம்!
ஊனழிவை ஒப்பனையால் மறைவாக மூடி
உண்மைக்குத் திரைபோடும் திரைப்படமே குறியாய்
வானத்தைத் தொடும் உயர்ந்த பண்புகளைவிட்டு
வீணாக வாழ்நாளைக் கழிக்கின்ற தமிழர்
மானத்தைப் போற்றாமல் நடிப்பவரின் பின்னால்
மதிகெட்டு மாண்பின்றி ஓடுகிறார் அந்தோ!

மின்மினியை விளக்கென்று மதித்திடுவோர் உண்டோ?
மின்மினிதான் சிறுதெய்வம்! மெய்விளக்கே இறையாம்!
அன்புடனே எவ்வுயிர்க்கும் இரங்கியதன் துயரை
அகற்றாமல் தோள் தலையில் எதைஎதையோ தாங்கிப்
பொன்பொருளைப் புன்மயிரைப் படைத்திடவும் வேண்டிப்
போட்டியிட்டுத் தந்திடவே துடிக்கின்ற தமிழர்
என்றுமுள ஓர் இறையை எண்ணியறி யாமல்
எங்கெங்கோ எப்படியோ ஓடுகிறார் அந்தோ!

பன்னாட்டுப் பயன்மொழிகள்

- இளைஞர்கள் கூட்டமாய்ச் செல்வர்; நடு அகவையர் இணையாகச் செல்வர்; முதியோர் தனியாகச் செல்வர். —சுவீடன்
- தங்கத் திறவுகோல் எல்லாப் பூட்டுகளுக்கும் சேரும். —அங்கேரி
- கணவன் இல்லையே என்று விதவை அழுகிறாள்; கணவன் இருக்கிறானே என்று மணமானவள் அழுகிறாள்; இருவரோடும் சேர்ந்து கன்னியும் அழுகிறாள். —இந்தியா.

''அண்ணா!''

''என்ன தம்பி?''

''பாரதியார் தமிழைப்பற்றிப் பாடியிருக்கும் பாடல்கள் எல்லாம் அவர் உள்ளத்திலிருந்து வந்தவையாக இருக்குமோ?''

''அதில் என்ன ஐயம்?''

''தமிழ்த்தாய் என்னும் தலைப்பில் அவர் பாடியிருக்கும் பாடலில் என்ன சொல்கிறார் தெரியுமா?

''சொல் தம்பி!''

''ஆதிசிவன் பெற்றுவிட, ஆரியமைந்தன் அகத்தியன் என்னும் வேதியன் இலக்கணம் செய்து கொடுக்க, நிறைவுடைய மொழிகளில் உயர்ந்ததான ஆரியமொழிக்கு நிகராக வாழ்ந்ததாம் தமிழ்!''

''அஃதாவது தமிழுக்கு முன்னமே ஆரியம் இருந்தது! அகத்தியர் இருந்தார்! தமிழ் இலக்கணத்தைத் தமிழர் யாரும் செய்யவில்லை! உலகத்தில் உயர்ந்த மொழி ஆரியந் தான்!'' என்று சொல்கிறாரா?''

''ஆமாம் இதிலிருந்து தெரிவது என்ன? பாரதியார் தம் உள்ளத்தில் ஆரியத்திற்கே முதலிடம் கொடுத்திருந்தார் என்பது தானே?''

''எனக்குத் தெரியாது தம்பி!''

- தமிழவேள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உருபா செலவில் கட்ட ஆய்வு நடத்தியபின் மரங்கள் மிகுதியாக உள்ள அப்பகுதியில் அணை கட்டினால் காடுகள் அழியும் என்று கூறி நிறுத்தி விட்டனர்.

3. இப்போது, கேரளாவின் தேவைக்குப் போக வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யும் அளவிற்கு மின் சாரம் மிகுதியாக உருவாகிறது. இந்த மரங்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள பாதுகாப்புக்கூட மூணாறு பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு இல்லையா?' என்று குமுறும் உள்ளத்தோடு கூறினார்.

மேலும், 'இந்த அணை கட்டுவதன் மூலம் அரசுக்குப் பெரிய வருவாய் ஒன்றுமில்லை. இடுக்கி மின் திட்டம் மூன்று கட்டமாக உள்ளது. அதில் இரண்டு கட்டந்தான் செயல்படுகிறது. ஒரு கட்டப் பணி இன்னும் தொடங்கவில்லை. இதும்போல மாநிலமெங்கும் முழுவதும் 12 இடங்களில் மின் திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இவற்றை விட்டு விட்டு மூணாறு அணை கட்ட முகாமை கொடுப்பது தான் எங்களுக்கு ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தான் அரசியல் மத வேறுபாடின்றி அனைவரும் ஒன்றுபட்டு, அணைகட்டுவதைத் தடுக்கிறோம் "பல ஆயிரம் உயிர்களையும் பணயம் வைக்க அணியமாக உள்ளோம்' என்கிறார் அவர்.

'ஒரு தொழிலாளிக்கு இழப்பு ஈடாக உருபா 8000 தருவார்களாம். இதை வைத்து அவன் வேறு இடத்தில் போய் எப்படி வாழ முடியும்? உதவி செய்வோம் என்று அரசு கூறுகிறது அதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை' என்றார் திரு. வரதன் அவர்கள்.

மூணாறு நகர் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினரும் மக்கள் கட்சிச் செயலாளருமான திரு. சான் செல்வன் உணர்ச்சியோடு கூறியதாவது:

'தேவிகுளம் பகுதியில் வசதிகள் செய்கிறோம் என்றது கேரள அரசு. ஆனால் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டிய மூணாறு உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைச் சரியில்லை என்று அரசு இடித்து விட்டது. அப்போது வேறு கட்டடம் கட்டித் தருகிறோம் என்றனர். ஆனால் இதுவரை கட்டித் தரவில்லை. இதனால் மாணவர்கள் கல்லூரிப் படிப்பிற்குத் தமிழகத்தைத் தான் நாட வேண்டியுள்ளது. பெரும்பாலும் தமிழ் நாட்டில் தான் படிக்கின்றனர். வட்டார மருத்துவமனைகூட இந்தப் பகுதிக்குத் தர மறுத்து, வேறு பகுதியில் கட்டித் தந்துள்ளனர் இந்தப் பகுதியை எந்த அரசு வந்தாலும் மாற்றாந்தாய் கண்ணோட்டத்தில் தான் பார்க்கின்றனர்' என்றார்.

மத குரு. அகஸ்டின் பின் கெரிரோ அவர்களின் கருத்து.

"மூணாற்றைப் பொறுத்தவரையில் தமிழின் மலையாளி என்றோ கிருத்தவன், இந்து, முகமதியர் என்றோ பாகுபாடு கிடையாது. மூன்று மதத்தவரின் கோயில்களும் மசூதிகளும் உள்ளன. இவை ஒரே உயரத்தில் சற்றுத் தள்ளித் தள்ளி அழகுற அமைந்துள்ளன.

மூணாறு அணை கட்டினால் கூட மழை பெய்தாலன்றி அணைக்குப் போதிய தண்ணீர் வராது இப்படிப்பட்ட திட்டத்திற்காகவா மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வணிகர்கள், மற்ற தொழில் செய்பவர்கள் என்று ஒரிலக்கம் பேரை வெளியேற்ற வேண்டும்? இந்தப்பகுதியை அரசு எப்படியும் எடுத்து விடும் என்ற அச்சத்தால் வளர்ச்சி குன்றியுள்ளது

இங்கு அணை கட்டக் கூடாது என்றும் தலைமையமைச்சர், திட்டக்குழு, மாநில முதல்வர் ஆகியோருக்குக் கோரிக்கை விடுத்துள்ளோம். இந்த அணைத் திட்டத்திற்குப் பிரான்சு அரசு உருபா 120 கோடி உதவுவதாகச் செய்தி கிடைத்துள்ளது. எனவே பிரான்சு தூதரகத்திற்குத் தொலை வரி கொடுத்துள்ளோம். அனைவரும் ஒன்றுபட்டு அணைக் கட்டுத் திட்டத்தைத் தடுப்போம்' என்றார்.

மற்றும் பலர், தமிழகத் தலைவர்களில் நெடுமாறன் ச.ம.உ. (M.L.A) தவிர வேறு யாரும் எங்கள் சிக்கல் பற்றிக் கண்டு கொள்ளவில்லையே என்று வருத்தப்பட்டனர். மேலும் தமிழகம் ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுத்தால் எங்களுக்குப் பாதுகாப்பும் நயன்மையும் கிடைக்கும் என்று மிக்க துன்பத்துடன் கூறினார்கள்.

அடிப்படை. 'தேவி' (12-1-83) கிழமையிதழ்
நேருரை கட்டுரை
மு. செங்குட்டுவன்
தமிழ்ப்படுத்தம்
பழங்கரை. நா. தமிழவேள்

★ மூன்றுவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழா ★
பீசித்தீவில் 1983 ஆகசுட்டில் நடைபெறும்!
உ. த. ப. இ. தலைவர் இர. ந. வீரப்பன் அறிவிப்பு!

மலேசியா சன. 26— மலேசியாவில் தலைமையகத்தைக் கொண்டிருக்கிற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர், திரு இர. ந. வீரப்பன் விடுத்திருக்கின்ற அறிவிக்கையில், மூன்றாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழாவும், மாநாடும் எதிர்வரும் ஆகசுடுத் திங்கள் முதல் கிழமையில் ஒரு கிழமை நிகழ்ச்சிகளாக நடைபெறும் என அறிவிப்பு விடுத்துள்ளார்.

இவ்வியக்கத்தின் காப்பாளர்களில் ஒருவரும், ஆசிரியையுமான திருவாட்டி சாரதா கிருட்டிணமூர்த்தி என்பவர், தங்கள் நாட்டின் ஏற்பாட்டுக்குழு ஒருமனதாக இதை முடிவு செய்துள்ளதை இவர் ஆங்குத் தெரிவித்திருக்கிறார். அந்தத் தீவின் தமிழ் மாதர் பகுதியின் தேசியத் தலைவியாகவும் அவர் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. 120 ஆண்டாக வாழ்கின்ற அவர்களின் "தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்", ஐம்பதாண்டு நிறைவுடன் பொன்விழாக் கொண்டாடியுள்ளது. இக்கழகத்தின் பேராதரவுடனும் திட்டத்துடனும் இம்மாநாட்டை அங்கு நடத்துகின்றனர். நந்தி என்ற ஊரில் நடைபெற்ற பல நகரப் பேராளர்கள் ஒன்றுகூடி முடிவெடுத்துத் திட்டமிட்டதாக வந்த செய்தி குறித்தே அவர் இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

1974-இல் இவ்வியக்கம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டதிலிருந்து பீசியிலும் கிளையை அமைத்து, அதன் தலைவராக இருந்து வரும் திரு. க. அப்பா பிள்ளையும் இதனைப் பொறுப்போடும், அவர்களின் கூட்டுறவோடும் சிறப்பாக விழாவை முன்னின்று நடத்தத் திட்டமிட்டிருப்பதாக இவர் கூறினார். பீசித்தீவு இங்கிருந்து தென் கிழக்கில் மூவாயிரம் கல் தொலைவில், ஆசுத்திரேலியாவுக்குக் கிழக்கில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உ. த. ப இயக்கத்தின் முதல் மாநாடு 1977இல் சென்னையில் நடந்ததும், 1980-இல் மொரிசியசு நாட்டில் 2-வது மாநாடு நடந்ததும் குறிக்கத்தக்கன. மொரிசியசில் நடந்தபோது தமிழக அரசு இரு அமைச்சர்களையும், மூன்று அறிஞர்களையும், ஒரு நாட்டியக் கலைக் குழுவையும் நூல்கள் பாசுகளையும் அனுப்பியது குறிப்பிடத்தக்கது. இது போலும், இத்தடவை அனுப்பிச் சிறப்பிக்க வேண்டும் என்று கடந்த திசம்பரில் தமிழக அரசின் கல்வியமைச்சர் மாண்புமிகு சி. அரங்கநாயகம் அவர்களைச் சந்தித்துக் கேட்டுக்கொண்ட விளக்கத்தையும் திரு வீரப்பன் சொன்னார்.

ஏழிலக்க மக்களில் சரி பாதிப் பேர் இந்தியர்கள். அவர்களில் பாதி தமிழர் ஐம்பதாயிரம் பேர் கருப்புத் தோட்டத்தில் ஏழை பாழைகளாகவும் கலப்பினத்தவர்களாகவும் மாறி வருகின்றனர். பெரும்பாலோர் தமிழில் எழுதப் பேசப் படிக்கத் தெரியாதவர்களாகி விட்டனர். ஐம்பது அகவைக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே தமிழ் தெரியும். தமிழும் பண்பாடும் அழிந்துவிட்டன. இந்தப் பேரச்சத்தைப் போக்கவே, இந்திய நடுவணரசும், தமிழக அரசு மற்றும் புதுவை அரசும், தமிழக மடங்களும், பொருட்செல்வர்களும் அருள் புரிந்து ஆதரவுத் தரவேண்டும் என இயக்கம் கடந்த பத்தாண்டாகப் போராடிக் கேட்டும், திட்டம் வழங்கியும் வருகிறது என தலைவர் வீரப்பன் குறிப்பிட்டிருக்கிறார். தமிழை எழுதப் படிக்கச் சொல்லித் தருவதற்கு ஏற்ற தமிழ்ப் பாடநூலும், ஒலிக் கருவிகளும், இசைத் தட்டுகளும், தமிழ்ப் படங்களும், தமிழ்த் தட்டச்சுப் பொறியும் உடனடியாகத் தேவைப்படுகின்றன என்றும், தமிழக அரசு இத்தமிழ்ப் பண்பாட்டு தவிகளை விரைந்து வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டதுடன், மாநாடு நடந்தால் தான் இவை கிடைக்கும் எனத் தாம் எண்ணுவதாகவும், தமிழ்ப் பண்பாட்டின் பேரிழப்புகளைப் போக்கிப் புதிய எழுச்சியை உண்டாக்கவே மாநாடும் விழாவும் வகை செய்ய முடியும் என அவர் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த மாநாட்டுக்கு உலகம் எங்கிருந்தும் பத்து நாடுகளின் முப்பது பேராளர்கள் பீசித்தீவுக்குச் செல்ல இருக்கிறார்கள் எனவும் அவர் தெளிவுபடுத்தினார், தாமும் செல்வாராம்.

பாடுவேன் பாடல்

புலவர் நாவை சிவம் இல.இ;கல்.இ.,
மணப்பாறை

உலகத் தமிழினத்தின் உண்மை உரிமைகளை
ஓங்கி முழங்குதற்கே
அலகில் தமிழ்நிலந்தான் அன்பாய்ப் பிறந்ததெனப்
பாடுவேன் பாடல்! — தமிழர்
ஆவல் நிறைந்ததெனப் பாடுவேன் பாடல்!

இலகுஞ் சிவப்பு வெள்ளை இன்பக் கொடியுயர்த்தி
ஏற்றம் முழங்குதற்கே
உலகில் தமிழ் நிலந்தான் உவப்பாய்ப் பிறந்ததெனப்
பாடுவேன் பாடல்! —தமிழர்
உள்ளம் நிறைந்ததெனப் பாடுவேன் பாடல்!

அன்னைத் தமிழ் மொழியின் ஆக்கம் பலவற்றை
ஆய்ந்து முழங்குதற்கே
கன்னல் தமிழ் நிலந்தான் கனிவாய்ப் பிறந்ததெனப்
பாடுவேன் பாடல்! —மொழிக்
கலப்பு மறைந்ததெனப் பாடுவேன் பாடல்!

என்னும் அறிவுகலை இன்ப வரசியலை
எங்கும் முழங்குதற்கே
நன்னூல் தமிழ் நிலந்தான் நன்றாய்ப் பிறந்ததெனப்
பாடுவேன் பாடல்! — தமிழர்
நாடும் சிறந்ததெனப் பாடுவேன் பாடல்!

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார். அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.